# செழிப்பு

## பொருளாதார அடிமைத்தனத்தின் ஆவியை ஜெயிப்பது எப்படி

Ps. ஆஸ்வின் ஜேம்ஸ்டட்

SERMON TRANSCRIPTION JULY 2019



# <u>செழிப்பு</u>

## *பொருளாதார அடிமைத்தனத்தின் ஆவியை ஜெயிப்பது எப்படி?*

**போதகர் ஆஸ்வின் ஜேம்ஸ்டட்**

# உள்ளடக்கம்


1. பொருளாசையின் ஆவி 1

2. கிறிஸ்துவுக்குள் நமது அடையாளம் 24

3. சபிக்கப்பட்ட சூழலில் வாழும் மனிதன் 34

4. உயிர்ப்பிக்கும் சாட்சி 50

## பொருளாசையின் ஆவி

**பாகம் I** **30th June 2019**

ஆண்டவரும் இரட்சகருமான இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துக்கள்!

உள்ளத்தில் ஒரு எதிர்பார்ப்புடனும், ஒரு வாஞ்சையுடனும் இந்த புத்தகத்தை நீங்கள் வாசிக்கும்போது நீங்கள் பெற்றுக்கொள்வது மாத்திரம் அல்ல, முன்பு போல ஜீவிக்கவும் மாட்டீர்கள். இவை யாவும் நீங்கள் எவ்வளவு வாஞ்சித்து எதிர்பார்க்கிறீர்கள் என்பதைப் பொறுத்தது.

நீங்கள் ஒரு கிறிஸ்தவ குடும்பத்தில் பிறந்திருந்தால், உங்கள் குழந்தை பருவத்திலிருந்தே ஆலயத்திற்குச் சென்று வந்திருக்கலாம் அல்லது நீங்கள் இயேசு கிறிஸ்துவை அறிந்த நாளிலிருந்து ஆலயத்தில் கலந்துகொண்டிருக்கலாம். பின்னர் அதுவே ஒரு பாரம்பரிய பழக்கமாய் மாறியிருக்கக் கூடும். ஆனால், வாஞ்சையுடன் எதிர்பார்த்து வருவதை விட்டு விடுகிறீர்கள்.

நீங்கள் ஒரு நட்சத்திர உணவு விடுதிக்குச் சென்றால், மிகவும் மரியாதையுடன் நடத்தப்பட்டு, வயிறும் மனதும் நிரம்பி வீட்டிற்கு திரும்ப எதிர்பார்க்கிறீர்கள். அதுவே ஒரு சாதாரண உணவு விடுதிக்குச் சென்றால் அவ்வளவு எதிர்பார்க்க மாட்டீர்கள். ஒரு மருத்துவரைச் சந்திக்கச் செல்லும்போது, நன்கு சிகிச்சை பெற எதிர்பார்க்கிறீர்கள். உங்கள் குடும்பத்தினருடனோ அல்லது நண்பர்களுடனோ வெளியே செல்லும்போது, குதூகலத்துடன் சிரித்து மகிழ எதிர்பார்க்கிறீர்கள்.

நாம் எங்கு சென்றாலும் ஏதோ ஒரு எதிர்பார்ப்பு இருக்கிறது. ஆனால் ஆலயத்திற்கு என்று வரும்போது நாம் ஒரு எதிர்பார்ப்பு கூட இல்லாமல், ஏதோ ஆலயத்திற்கு செல்ல வேண்டுமே என்று வருகிறோம்.

ஆனால், எங்கள் சபை கூடுகை மற்ற
சபை கூடுகையை விட வித்தியாசமானது. ஏனென்றால் நம் தேவன் அற்புதங்களை இன்னும் செய்கிறார் என்று நிச்சயமாய் நம்பி விசுவாசித்து ஐக்கியம் கொள்கிறோம். நம் தேவன் நேற்றும், இன்றும், என்றென்றும் மாறாதவராய் இருக்கிறார் என்று உளமார நம்புகிறோம்.

அனுதினமும் ஜெபித்து எங்கள் அன்றாட வாழ்க்கையில் தேவனின் பிரசன்னத்தை அனுபவிக்கிறோம். தேவனின் ஒவ்வொரு தொடுதலிலும் ஒரு மாற்றத்தை விரும்புகிறோம். அது இயேசுவிடம் இன்னும் நெருங்கி ஜீவிப்பதே. நம் மனதிலும், நம் உணர்ச்சிகளிலும், நம் ஆவியிலும் என்று எல்லா நிலைகளிலும் மாற்றத்தை விரும்பி வாஞ்சிக்கிறோம். இப்போதும் அடுத்த நிலைக்கு செல்ல வேண்டிய நேரம் வந்துவிட்டது.

இந்த புத்தகத்தில், பொருளாசையின் ஆவியைக் குறித்து நாம் காண்போம். நம் வாழ்வில் இந்த பொருளாசையின் ஆவியை உடைக்க வேண்டியது மிகவும் கட்டாயமான அவசியமாகும்.

## பொருளாசையின் ஆவி (The Spirit of Mammon) என்றால் என்ன?

பொருளாசை என்றால் பணம் என்று பொருள். இது செல்வம், பணம், தங்கம் அல்லது செழிப்புக்கான அராமைக்(Aramaic) சொல். பொருளாசை என்பது பணத்தை கட்டுப்படுத்தும் ஒரு ஆவி. நாம் நினைப்பது போல் பணம் என்பது ஒரு பொருள் சார்ந்த விஷயம் அல்ல. இந்த ஆவி நம்மீது ஆதிக்கம் செலுத்த முயற்சிக்கிறது, நம் வாழ்க்கையில் விஷயங்களை ஆணையிட முயற்சிக்கிறது. எப்படியோ, நாம் பணத்திற்கு அடிமைப்படுகிறோம். பணம் ஒரு ஆவிக்குரிய விஷயம் என்பதை நாம் புரிந்துகொண்டவுடன், அதை சரியான

வழியில் சமாளிக்க முடியும். நமது
வாழ்க்கை முறையும், வாழ்க்கையில் நம் கவனமும் மாறும்.

ஆனால் இந்த பொருளாசை ஆவியை முறிப்பது அவ்வளவு இலகுவான காரியம் அல்ல. இதனுடன் பிற நுட்பமான ஆவிகளும் செயல்படுகின்றன. எனவே இதனை நீங்கள் முதன்முதல் படிக்கும்போது ஒரு நிராகரிக்கும் மனப்பான்மையுடன் படிக்கலாம். எப்பொழுதும் இந்த சபை சுகத்தையும், செல்வத்தையும், செழிப்பையும் பற்றி மட்டுமே பேசுகிறது என்று நீங்கள் நினைக்கலாம். உங்களுக்கு பல்வேறு கவனச்சிதறல்கள் இருக்கலாம். ஆயினும் நீங்கள் தொடர்ந்து ஜெபசிந்தையுடன் இந்த புத்தகத்தைப் படிக்கும்போது, உங்கள் வாழ்க்கையில் செயல்படும் பொருளாசையின் ஆவியை முறிப்பீர்கள்.

***<u>அறிக்கை: (வாய் விட்டு சொல்லவும்)</u>***

***பொருளாசையின் ஆவி இன்று விழ வேண்டும். எனது செல்வத்தையும், நிதிகளையும் கட்டுப்படுத்தும் ஆவி இன்று உடைந்து விடும்.***

பொருளாசையின் ஆவி நம்மைக் கட்டுப்படுத்துகிறது. நம்மிடம் போதுமான பணம் இருந்தாலும் கூட, இந்த ஆவி நமக்கு ஒரு பாதுகாப்பற்ற உணர்வைத் தருகிறது. நம்மிடம் பணம் இருந்தாலும் கூட இன்னும் 'மழை காலத்திற்காக சேமிக்க வேண்டும்' என்ற மனப்பான்மையுடனேயே செயல்படுகிறோம்.

ஒரு 'மழை காலத்திற்காக பணத்தை சேமிப்பது சரியானதுதானே?' என்று நீங்கள் கேட்கலாம். இப்படி பணத்தை சேமிக்கும் நடைமுறையில் நாம் பயணிக்கும்போது, நம்மையே கசக்கி, தேவன் நமக்கென்று

கொடுத்ததை சந்தோசத்தோடு அனுபவிக்க மறந்து விடுகிறோம்.

சிலர் பணத்தைப் பெற்ற அதே நாளிலே செலவழித்து, மீதமுள்ள மாதத்தை கிரெடிட் கார்டு (credit card) மூலம் செலவழிக்க விரும்புகிறார்கள். சிலர் விசுவாசத்தினால் வாழ்வது என்பது கிரெடிட் கார்டு (credit card) மூலம் வாழ்வது என்று நினைக்கிறார்கள். ஏன்? ஏனென்றால், தேவைக்கு அதிகமாக பொருட்களை வாங்கி குவித்து கடைசியில் மாதத் தவணைகளையும், வட்டியையும் கட்டும் நிலைமைக்கு ஆளாகிறார்கள். அவர்கள் தேவையற்ற பல கடன் சுமைகளுக்குள் சிக்கிக்கொள்கிறார்கள்.

எப்படியாயினும், நாம் பொருளாசையின் ஆவியால் கட்டப்படுகிறோம். பணம் இல்லாமல் நம்மால் எதுவுமே செய்ய முடியாது என்று நாம் நினைக்கிறோம்.

எங்களுக்கு 20 ஆயிரம் ரூபாய் தான் மாத வருமானம் அதனால்தான் நாங்கள் விளிம்பு நிலையில் வாழ்கிறோம். ஒருவேளை எங்களுக்கு 2 லட்சம் ரூபாய் மாத வருமானம் என்றால் நாங்கள் அப்படி வாழமாட்டோம் என்று நீங்கள் நினைக்கலாம். ஆனால் பல குடும்பங்களைக் கையாளும் ஒரு போதகர் என்ற முறையில், மாதத்திற்கு 2 முதல் 3 லட்சம் சம்பாதிக்கும் மக்கள் கூட இன்னும் விளிம்பில் வாழ்கிறார்கள் என்பதை என்னால் காண முடிகிறது.

நிதி நிலைமையின் விளிம்பில் வாழ்கிறார்கள் என்று நான் சொல்லும்போது, நிச்சயமாகவே அவர்கள் விளிம்பு நிலையில் தான் வாழ்கிறார்கள். சம்பள தாமதம் ஏற்படுமானால் அவர்களால் ஒரு வாரம் கூட சமாளிக்க முடியாது. இது பணத்தைப் பற்றிய காரியமே அல்ல. அது ஒரு ஆவி. இதனைப் புரிந்து கொள்ள நீங்கள் திறந்த மனதுடன் இந்த புத்தகத்தைப் படிக்க வேண்டும். இது உங்களிடம் உள்ள கடனைப் பற்றியோ அல்லது பணத்தைப் பற்றியோ அல்ல.

உங்களிடம் உள்ள கடன்களுக்கு நீங்கள்
பல காரணங்களைக் கூறலாம். ஆனால் அது ஆவிக்குரியது.

***அறிக்கை: (வாய் விட்டு சொல்லவும்)***

***பொருளாசை ஆவியின் பிடியிலிருந்து நான் விடுபடுவேன்.***

இது வெறும் செழிப்பின் உபதேசம் அல்ல. நாம் செழிக்க வேண்டும் என்பது தேவனின் சித்தம். சத்திய வேதம் செழிப்பு பற்றி பேசுகிறது. 2 கொரிந்தியர் 8:9 -இல் பவுல் இதைப் பற்றி கூறுகிறார்.

**II கொரிந்தியர் 8:9**

**நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் கிருபையை அறிந்திருக்கிறீர்களே; அவர் ஐசுவரியமுள்ளவராயிருந்தும், நீங்கள் அவருடைய தரித்திரத்தினாலே ஐசுவரியவான்களாகும்படிக்கு, உங்கள்நிமித்தம் தரித்திரரானாரே.**

நம் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து ஐசுவரிய சம்பூரணர். அவர் ஐசுவரியவானாக இருந்தபோதிலும், நமக்காய் தரித்திரரானார், அவருடைய வறுமையினால் நீங்கள் ஐசுவரியவான் ஆகிறீர்கள். திரும்பவும் பவுல் எழுதுகிறார், உங்கள் ஆத்துமா வாழ்வதுபோல் நீங்கள் **எல்லாவற்றிலும்** வாழ்ந்து சுகமாய் இருக்க வேண்டும் என்று.

**II கொரிந்தியர் 2:14 -இல் எழுதியிருப்பதை பார்ப்போம். கிறிஸ்துவுக்குள் எப்பொழுதும் எங்களை வெற்றிசிறக்கப்பண்ணி, எல்லா இடங்களிலேயும் எங்களைக்கொண்டு அவரை அறிகிற அறிவின் வாசனையை வெளிப்படுத்துகிற தேவனுக்கு ஸ்தோத்திரம்.**

***அறிக்கை: (வாய் விட்டு சொல்லவும்)***
***இயேசு கிறிஸ்து எப்போதும் என்னை வெற்றிக்குள் வழிநடத்திச் செல்கிறார். நான் எப்போதும் வெற்றி கொடியேற்றுவேன்***

எனவே செழிப்பு என்பது ஒரு மோசமான சொல் அல்ல. அது பாவமும் அல்ல. நாம் வளமாக இருக்க வேண்டும் என்பது தேவனின் விருப்பம். தேவனுடைய பிள்ளைகளுக்கு செழிப்பு என்பது அவர்களின் உரிமையே!

***அறிக்கை: (வாய் விட்டு சொல்லவும்)***
***செழிப்பு எனக்குரியது***

தேவன் நம்மை அவருக்கென்று சிறந்த உடைமையாகவும் (சொந்தமாகவும்) ராஜரீகமான ஆசாரியக்கூட்டமாயும் அழைக்கிறார். ராஜரீகம் என்பது அரசனுக்குரியது. நாம் ஆவிக்குரியவர்களாதலால் ஆசாரியர்கள் என்று அழைக்கப்படுகிறோம். பரிதாபத்திற்குரிய ஆசாரியர்களாய் அல்ல ராஜரீகமான ஆசாரியர்களாய் அழைக்கப்படுகிறோம்.

***அறிக்கை: (வாய் விட்டு சொல்லவும்)***
***நான் ராஜரீகமான ஆசாரியன்***

பணம் சம்பாதிக்க நாம் ஒரு நிறுவனத்திலிருந்து மற்றொரு நிறுவனத்திற்குச் சென்று சம்பள உயர்வு பெற வேண்டும் என்று நாம் நினைக்கலாம். அது செழிப்பு அல்ல. பணம் என்பது செழிப்பு அல்ல. தேவன் நமக்குக் கொடுத்த பணத்தை அனுபவிப்பது செழிப்பு. மக்கள் நிறைய பணம் சம்பாதிக்கிறார்கள். ஆனால் பணம் நமக்கு ஆரோக்கியமான, வளமான வாழ்க்கையை தராது. நிறைய பணம் சம்பாதிக்கும் நபர்களுக்கு அவர்களின்

பிரச்சினைகள் உள்ளன. ஆகவே
பொருளாசை என்பது பைபிளின் படி பணத்தையும் உலக செல்வத்தையும் கட்டுப்படுத்தும் ஆவி.

செழிப்பு என்ற சொல் பணம் மற்றும் செல்வத்தைப் பற்றியது மட்டுமல்ல; அது ஆவிக்குரிய ஆசீர்வாதத்தைப் பற்றியது. ஒருவர் வளமானவராக இருந்தால் அவர் மகிழ்ச்சியாக இருக்கிறார், என்று அர்த்தம்.

லூக்கா 16: 1-17-ல், உக்கிராணக்காரன் உவமையைப் பற்றி நாம் காண்கிறோம்.

**1. பின்னும் அவர் தம்முடைய சீஷர்களை நோக்கி: ஐசுவரியவானாகிய ஒரு மனுஷனுக்கு ஒரு உக்கிராணக்காரன் இருந்தான்; அவன் தன் எஜமானுடைய ஆஸ்திகளை அழித்துப்போடுகிறதாக எஜமானுக்கு அறிவிக்கப்பட்டது.**

**2. அப்பொழுது எஜமான் அவனை வரவழைத்து: உன்னைக்குறித்து நான் இப்படிக் கேள்விப்படுகிறதென்ன? உன் உக்கிராணக் கணக்கை யொப்புவி, இனி நீ உக்கிராணக்காரனாயிருக்கக்கூடாது என்றான்.**

**3. அப்பொழுது உக்கிராணக்காரன்: நான் என்ன செய்வேன், என் எஜமான் உக்கிராண விசாரிப்பிலிருந்து என்னைத் தள்ளிப்போடுகிறானே; கொத்துகிறதற்கு எனக்குப் பெலனில்லை, இரக்கவும் வெட்கப்படுகிறேன்.**

**4. உக்கிராண விசாரிப்பைவிட்டு நான் தள்ளப்படும்போது, என்னைத் தங்கள் வீடுகளில் ஏற்றுக்கொள்வார் உண்டாகும்படி செய்யவேண்டியது இன்னதென்று எனக்குத் தெரியவந்தது, என்று தனக்குள்ளே சொல்லிக்கொண்டு;**

**5. தன் எஜமானிடத்தில் கடன்பட்டவர்களை ஒவ்வொருவனாக வரவழைத்து: முதலாவது வந்தவனை நோக்கி: நீ என் எஜமானிடத்தில் பட்ட கடன் எவ்வளவு என்றான்.**

**6. அவன்: நூறுகுடம் எண்ணெய் என்றான். அப்பொழுது உக்கிராணக்காரன் அவனை நோக்கி: நீ உன் சீட்டை வாங்கி, உட்கார்ந்து, ஐம்பது என்று சீக்கிரமாய் எழுது என்றான்.**

**7. பின்பு அவன் வேறொருவனை நோக்கி: நீ பட்ட கடன் எவ்வளவு என்றான். அவன்: நூறு கலம் கோதுமை என்றான். அப்பொழுது அவன்: நீ உன் சீட்டைவாங்கி, எண்பது என்று எழுதுஎன்றான்.**

**8. அநீதியுள்ள உக்கிராணக்காரன் புத்தியாய்ச் செய்தான் என்று எஜமான் கண்டு, அவனை மெச்சிக்கொண்டான். இவ்விதமாய் ஒளியின் பிள்ளைகளைப்பார்க்கிலும் இந்தப் பிரபஞ்சத்தின் பிள்ளைகள் தங்கள் சந்ததியில் அதிக புத்திமான்களாயிருக்கிறார்கள்.**

**9. நான் உங்களுக்குச் சொல்லுகிறேன், நீங்கள் மாளும்போது உங்களை நித்தியமான வீடுகளிலே ஏற்றுக்கொள்வாருண்டாகும்படி, அநீதியான உலகப்பொருளால் உங்களுக்குச் சிநேகிதரைச் சம்பாதியுங்கள்.**

**10. கொஞ்சத்திலே உண்மையுள்ளவன் அநேகத்திலும் உண்மையுள்ளவனாயிருக்கிறான், கொஞ்சத்திலே அநீதியுள்ளவன் அநேகத்திலும்**

**அநீதியுள்ளவனாயிருக்கிறான்.**

**11. அநீதியான உலகப்பொருளைப்பற்றி நீங்கள் உண்மையாயிராவிட்டால், யார் உங்களை நம்பி உங்களிடத்தில் மெய்யான பொருளை ஒப்புவிப்பார்கள்?**

**12. வேறொருவனுடைய காரியத்தில் நீங்கள் உண்மையுள்ளவர்களாயிராவிட்டால், உங்களுக்கு யாதொன்றைச் சொந்தமாகக் கொடுப்பவர் யார்?**

**13. எந்த ஊழியக்காரனும் இரண்டு எஜமான்களுக்கு ஊழியஞ்செய்யக்கூடாது, ஒருவனைப் பகைத்து மற்றவனைச் சிநேகிப்பான், அல்லது ஒருவனைப் பற்றிக்கொண்டு மற்றவனை, அசட்டைபண்ணுவான். தேவனுக்கும் உலகப்பொருளுக்கும் ஊழியஞ்செய்ய உங்களாலே கூடாது என்றார்.**

**14. இவைகளையெல்லாம் பொருளாசைக்காரராகிய பரிசேயரும் கேட்டு, அவரைப் பரியாசம்பண்ணினார்கள்.**

**15. அவர் அவர்களை நோக்கி: நீங்கள் மனுஷர்முன்பாக உங்களை நீதிமான்களாகக் காட்டுகிறீர்கள், தேவனோ உங்கள் இருதயங்களை அறிந்திருக்கிறார்; மனுஷருக்குள்ளே மேன்மையாக எண்ணப்படுகிறது தேவனுக்கு முன்பாக அருவருப்பாயிருக்கிறது.**

**16. நியாயப்பிரமாணமும் தீர்க்கதரிசன வாக்கியங்களும் யோவான்வரைக்கும் வழங்கிவந்தது; அதுமுதல் தேவனுடைய ராஜ்யம் சுவிசேஷமாய் அறிவிக்கப்பட்டுவருகிறது, யாவரும் பலவந்தமாய்**

**அதில் பிரவேசிக்கிறார்கள்.**

**17. வேதத்தில் ஒரு எழுத்தின் உறுப்பு அவமாய்ப் போவதைப்பார்க்கிலும், வானமும் பூமியும் ஒழிந்துபோவது எளிதாயிருக்கும்.**

சேவிப்பது என்றால் ஆராதனை செய்வது! நீங்கள் தேவனுக்கு அல்லது பொருளாசையின் ஆவிக்கு சேவை செய்யலாம். பொருளாசை என்பது ஒரு பொருள். நாம் பணத்தை வணங்கக்கூடாது, ஆனால் தேவன் ஒரு ஆவி, இயேசு ஆவிக்குரிய உலகில் பொருளாசையின் ஆவியை தேவனுடன் ஒப்பிடுகிறார். பொருளாசையின் ஆவியோ, செல்வத்தின் ஆவியோ செழிப்பு அல்ல!

தேவன் மனிதனைப் படைத்தார், பின்னர், ஆபிரகாம் மற்றும் ஈசாக்கின் காலத்தில் தேவன் அவர்களுடன் பொருளாதாரம் பற்றி ஒருபோதும் பேசவில்லை. பொருளாசையின் ஆவி பற்றி அவர் அவர்களுக்கு ஒருபோதும் கற்பிக்கவில்லை. ஆனால் உலகில் எங்கோ ஒரு நிலையில், எல்லாமே பணத்தைப் பற்றியதாகிவிட்டது.

ஆபிரகாம் செழிப்பாக இருந்ததாக பைபிளில் காண்கிறோம், ஆனால் அது பணத்தைப் பற்றியது அல்ல. ஈசாக்கு முன்னேறினார், அது பணத்தைப் பற்றியது அல்ல. ஈசாக்கு பஞ்சத்தின் போது விதைத்து நூறு மடங்கு அறுவடை செய்தார். இவை தேவனின் ஆசீர்வாதங்கள். தானியேலில் பணத்தைப் பற்றி ஒருபோதும் குறிப்பிடவில்லை, அவர் பதவி உயர்வு பெற்றார், பின்னர் ராஜாவின் உதவியாளரானார். பைபிளில், பணத்தை ஆசீர்வாதத்தின் ஒரே ஆதாரமாக நாம் காணவில்லை.
நாம் தேவனின் பிள்ளைகள் என்றாலும் சில சமயங்களில் பொருளாசை ஆவியின் அதிகாரத்தின் கீழ்

செயல்படுகிறோம். தேவனைப் போலவே, பொருளாசையும் மற்றொரு எஜமான். நீங்கள் ஒரு நேரத்தில் இரண்டு எஜமானர்களுக்கு சேவை செய்ய முடியாது. நீங்கள் ஒரு எஜமானருக்கு மட்டுமே சேவை செய்ய முடியும். நீங்கள் எந்த எஜமானுக்கு சேவை செய்ய விரும்புகிறீர்கள் என்பதைப் புரிந்துகொண்டு உங்களை அந்த எஜமானுடன் இணைத்துக் கொள்ளுங்கள்.

தேவனின் பிள்ளைகளைத் தவிர, இந்த உலகில் உள்ள எல்லோரும் தங்கள் வாழ்க்கையின் ஒரு கட்டத்தில் பொருளாசை ஆவியின் கீழ் செயல்படுகிறார்கள். நீங்கள் எப்போதுமே தேவனை வணங்குகிறீர்கள் என்று நீங்கள் நினைக்கலாம், நீங்கள் ஞானஸ்நானம் பெற்று இருக்கிறீர்கள், ஆவியில் நிறைந்திருக்கிறீர்கள், தேவனின் வேலையைச் செய்கிறீர்கள். ஆனால் நீங்கள் பொருளாசையின் ஆவியின் கீழ் செயல்படுகிறீர்கள். நீங்கள் பொருளாசையின் ஆவியை கொண்டுடிருக்கிறீர்கள் என்று அர்த்தமல்ல. தேவனின் ஆசீர்வாதங்களுக்காகவும், செழிப்புக்காகவும் நீங்கள் மகிழ்ச்சியுடன் இருக்கிற நேரங்கள் இருக்கலாம். உங்கள் வயிறு எரியும் நேரங்களும் இருக்கலாம், உங்கள் வேலை, பணம் மற்றும் பிற சூழ்நிலைகளைப் பற்றி சிந்திக்கும் போது இதயம் துடிக்கும் நேரங்களும் இருக்கலாம். எனவே, நீங்கள் ஒரு கட்டத்தில் தாக்குதலுக்கு உள்ளாகிறீர்கள்.அந்த நேரத்தில் பொருளாசையின் ஆவி நம்மைக் கட்டுப்படுத்துகிறது.

உங்கள் குடும்பத்தினருடன் நேரத்தை செலவிட முடிவு செய்யும் போது அல்லது நீங்கள் ஊழியம் செய்ய முடிவு செய்யும் போது அல்லது நீங்கள் எதாவது புதிய முயற்சி எடுக்க முடிவும் செய்யும்போது, பொருளாசையின் ஆவி தலையிடுகிறது. நீங்களும் உங்கள் மனைவியும் உட்கார்ந்து விவாதிக்கும் உங்கள் முடிவு அட்டவணையில், இந்த ஆவி தலையிடுகிறது, ஊடுருவுகிறது மற்றும் தொந்தரவு

செய்கிறது. நீங்கள் எடுக்கும் ஒவ்வொரு முடிவும் பொருளாசையின் ஆவியால் திசைதிருப்பப்படலாம்.

வழக்கமாக, நாம் முடிவுகளை எடுக்கும்போது, நமது வருமானம் அல்லது சம்பளத்தின் அடிப்படையில் அல்லது நமக்கு கிடைக்கும் பதவி உயர்வு அடிப்படையில் முடிவுகளை எடுப்போம். நமது முடிவுகளில் 99% அதன் அடிப்படையில் அமைந்தவை. ஆனால் தேவனின் பிள்ளைகளான நாம் விசுவாசத்தினால் நடப்போம், பார்வையால் அல்ல. நம்மில் எத்தனை பேருக்கு "என்னிடம் இருக்கிறதா? என்று எனக்குத் தெரியாது, ஆனால் தேவன் சொல்வதை நான் நம்புகிறேன்" என்று சொல்வதற்கு நம்பிக்கை இருக்கிறது. நாம் அப்படி சொன்னாலும், நம் வருமான ஆதாரங்களைத் தாண்டி நம்மில் எத்தனை பேர் தீர்மானம் எடுக்க நம்பிக்கை இருக்கிறது?

உங்களிடம் உள்ளதைக் கொண்டு செயல்படுவது புத்திசாலித்தனம் என்று நீங்கள் நினைக்கலாம். ஆனால் உங்களிடம் உள்ளதை வைத்து நீங்கள் செயல்பட்டால், உங்களிடம் இருப்பதைத் தாண்டி செல்ல மாட்டீர்கள்.

நீங்கள் விசுவாசத்தினால் ஒரு அடி எடுத்து வைக்க வேண்டும். இயேசு வா என்று சொன்னபோது, பேதுரு தன் திறனைத் தாண்டி ஒரு அடி எடுத்து அவன் தண்ணீரில் நடந்தான். வார்த்தை இருக்கும் வரை, அவர் தண்ணீரில் நடந்து சென்றார்.

மொர்தெகாய் அரண்மனை வாயிலில் ஒரு காவலாளியாக இருந்தார், ஆனால் அவர் தேவனை நம்பி, தனது திறனைத் தாண்டி முன்னேறி, இறுதியாக ராஜாவின் தலைமை ஆலோசகரானார். யோசேப்பு ஒரு சாதாரண மனிதர், ஆனால் அவர் தேவனை நம்பி, தன் திறனைத் தாண்டி ஒரு அடி

எடுத்தார், தேவன் அவரை ராஜாவின் சிம்மாசனத்திற்கு அழைத்துச் சென்றார்.

நம்மில் பலர் பாதுகாப்பாக விளையாட விரும்புகிறோம், நம்மைப் பற்றி யாரும் தெரிந்து கொள்ளக்கூடாது, யாரும் நம்மைப் பற்றி எதுவும் பேசக்கூடாது, என வாழ்ந்து, பரலோகத்திற்கு செல்ல விரும்புகிறோம். நாம் மாத சம்பளத்திற்குள் வாழ்ந்தால், இந்த உலகத்தில் தேவன் நமக்குக் கொடுத்திருக்கும் வாழ்க்கையையும், வல்லமையையும் வீணடிக்கிறோம். நீங்கள் அப்படி வாழ வேண்டியதில்லை, நீங்கள் விசுவாசத்தினால் ஒரு படி எடுத்து சாகசங்கள் செய்ய வேண்டும்.

ஆனால், பொருளாசையின் ஆவி அந்த நடவடிக்கை எடுக்க நம்மை அனுமதிக்காது. அந்த ஆவியும் முடிவெடுக்கும் ஒரு பகுதியாக இருகிறது. அது பயம், பதட்டம், மனச்சோர்வு ஆகியவற்றால் நம்மை நிரப்புகிறது.

இன்று இயேசுவின் வல்லமையான நாமத்தில் பொருளாசையின் ஆவி உடைந்துவிடட்டும்! இந்த ஆவியை உடைக்கும்போது நீங்கள் அழகான விஷயங்களை சிந்திக்கத் தொடங்குவீர்கள். நீங்கள் அழகான விஷயங்களைப் பற்றி கனவு காணத் தொடங்குவீர்கள். உங்கள் சேட்டைகளை விரித்து பறக்க முடியும் என்று நீங்கள் உணருவீர்கள்.

நாம் உயர்ந்த நிலைக்குச் செல்லப் போகிறோம்; கழுகுகளைப் போலச் செட்டைகளை அடித்து எழும்பப் போகிறோம்; எழும்பிப் பிரகாசி; உன் ஒளிவந்தது!

இயேசுவின் ஆவி நம்மில் இருக்கிறது. அவர் எல்லா ஆவிகளுக்கும் கர்த்தர். இந்த உலகில் ஏராளமான ஆவிகள் உள்ளன; தெய்வங்கள் மற்றும் தேவதைகள் உள்ளன, அவை ஆவிகள். பலர் பல மதங்களைப் பின்பற்றுகிறார்கள், ஆனால்

இயேசு மற்ற எல்லா ஆவிகளையும் ஆளுகிறார். ஒவ்வொரு இருண்ட ஆவியும் இயேசு என்ற பெயரைக் குறிப்பிடும்போது தப்பி ஓடுகிறது!

பொருளாசை ஒரு எஜமானர், தேவன் ஒரு எஜமானர் என்று இயேசு கூறினார். பொருளாசை நம்மை ஏமாற்றலாம். பொருளாசையின் அதிகாரத்திற்கு நம்மை அடிபணியச் செய்யலாம். ஆனால் தேவன் வல்லமை வாய்ந்தவர். செழிப்பு இல்லாதது மற்றும் செல்வத்தின் பற்றாக்குறை, ஒரு ஆவிக்குரிய தாக்குதல். உங்களிடம் திறன் இல்லை அல்லது உங்கள் நிறுவனம் சரியாக செயல்படவில்லை என்பது அல்ல, அது ஆவிக்குரியது. பொருளாசையின் ஆவி நம்மில் செயல்பட அனுமதிக்கும் வரை, நாம் வளர முடியாது!

**உங்கள் வாழ்க்கையில் பொருளாசையின் ஆவி எவ்வாறு செயல்படுகிறது?**

இந்த உலகில், நாம் நிலத்தில் நடக்க வேண்டும், மேலே பறக்க முடியாது. நாம் தண்ணீருக்குள் செல்லும்போது, அது வேறு பரிமாணம். நாம் தண்ணீரில் நடக்க முடியாது, ஆனால் நாம் நீந்தலாம். நாம் தண்ணீருக்குள் சென்று நிறைய சாகசங்களைச் செய்யலாம், அதை நிலத்தில் செய்ய முடியாது. அதேபோல், ஆவிக்குரிய உலகில், நாம் தெரிந்து கொள்ள வேண்டிய ஆவிக்குரிய சட்டங்கள் உள்ளன, அந்த சட்டங்களை நாம் கடைபிடிக்க வேண்டும். இல்லாவிட்டால் நாம் ஆவிக்குரிய உலகத்தை வெல்ல முடியாது.

இயல்பாக, ஒரு நபர் **பொருளாசையின்** ஆவிக்கு உட்பட்டவர். நீங்கள் இரட்சிக்கப்பட்டு இருந்தாலும், நீங்கள் **பொருளாசையின்** ஆவியின் கீழ் இருக்கிறீர்கள், சேவை செய்கிறீர்கள். இதிலிருந்து வெளியே வந்து ஆவிக்குரிய உலகத்தில் தேவனை சேவிப்பதற்கான ஒரே வழி கொடுப்பதே. இந்த பிரசங்கம் பணம் சம்பாதிப்பது என்று இப்போது நீங்கள் நினைக்கலாம், ஆனால் நீங்கள் தொடர்ந்து

படிக்கும்போது **பொருளாசையின்** ஆவியை மிகவும் தெளிவாக புரிந்து கொள்ளுவீர்கள். வேதத்தின் சட்டத்தை பின்பற்ற உங்களுக்கு உதவ நான் முயற்சிக்கிறேன்.

**லூக்கா: 6: 38**

**கொடுங்கள், அப்பொழுது உங்களுக்கும் கொடுக்கப்படும்; அமுக்கிக் குலுக்கிச் சரிந்து விழும்படி நன்றாய் அளந்து, உங்கள் மடியிலே போடுவார்கள்; நீங்கள் எந்த அளவினால் அளக்கிறீர்களோ அந்த அளவினால் உங்களுக்கும் அளக்கப்படுமென்றார்.**

நீங்கள் கர்த்தருக்குக் கொடுக்கும்போது, **பொருளாசையின்** ஆவியைக் மேற்க்கொள்ள முடியும். உங்கள் தசமபாகத்தையும், பணத்தையும் கொடுத்தவுடன் நீங்கள் மேற்க்கொள்ள முடியாது. அது மட்டுமே உங்களை வெல்ல தகுதியுடையதாக்காது. ஆனால், முதல் படி கொடுப்பதே. நீங்கள் கொடுக்காத வரை **பொருளாசை** ஆவியின் அடிமைத்தனத்தின் கீழ் இருக்கிறீர்கள்.

பழைய ஏற்பாட்டில், வருமானத்தில் பத்து சதவீதத்தை ஆசாரியருக்குக் கொடுக்கும்படி கர்த்தர் கூறியுள்ளார். அது தேவனுக்காக அல்ல. தேனும் பாலும் பாயும் கானான் தேசத்தில் தேவன் இரவும் பகலும் இஸ்ரவேல் மக்களுக்கு உணவளித்தார். தேவன் ஆசாரியருக்கும் லேவியருக்கும் எளிதில் உணவளிக்க முடியும். ஆனால், தேவன் தம் மக்களுடைய வருமானத்தில் பத்தில் ஒரு பகுதியை ஆசாரியருக்குக் கொடுக்கும்படி ஏன் கேட்டார்? செலுத்தப்படும் வருமானத்தில் பத்தில் ஒரு பங்கு ஆலயத்தின் களஞ்சியசாலைக்குச் செல்கிறது. சேமிப்பது என்றால் மிகுதியாக இருக்கிறது என்று பொருள்

**.மல்கியா 3:10 என் ஆலயத்தில் ஆகாரம் உண்டாயிருக்கும்படித் தசமபாகங்களையெல்லாம்**

**பண்டசாலையிலே கொண்டுவாருங்கள்; அப்பொழுது நான் வானத்தின் பலகணிகளைத் திறந்து, இடங்கொள்ளாமற்போகுமட்டும் உங்கள்மேல் ஆசீர்வாதத்தை வருஷிக்கமாட்டேனோவென்று அதினால் என்னைச் சோதித்துப் பாருங்கள் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்.**

ஆலயத்திற்கு எதுவும் தேவையில்லை, எனவே நாங்கள் கொடுக்க தேவையில்லை என்று நீங்கள் நினைக்கலாம். பைபிள் சொல்வது போல் நம்முடைய ஆசீர்வாதங்களுக்காக கொடுக்கிறோம். நாம் கடினமாக சம்பாதித்த பணம் ஒரு தியாகமாக கொடுக்கப்படுகிறது. நாம் கொடுக்கும் தருணத்தில், **பொருளாசையின்** ஆவியை மேற்க்கொள்கிறோம்.

“அநீதியான வருமானத்திலிருந்து” நீங்கள் எடுக்கும்போது, அநீதியான எதையும் செய்யவில்லை என்று நீங்கள் கூறலாம், ஆனால், இந்த உலகத்தினால் உண்டான அனைத்தும் அநியாயமானது என்று பைபிள் சொல்கிறது. **பொருளாசையின்** ஆவி பணத்தின் அதிபதி!

இந்த உலகம் இருளில் உள்ளது, சாத்தான் இந்த உலகத்தின் அதிபதி. சாத்தான் உலகத்தின் அதிபதி என்பதை இயேசு தெளிவாக ஒப்புக்கொள்கிறார். மத்தேயு 4:9ல் “நீர் சாஷ்டாங்கமாய் விழுந்து, என்னைப் பணிந்துகொண்டால், இவைகளையெல்லாம் உமக்குத் தருவேன்” என்ற சாத்தானின் கூற்றை இயேசு மறுக்கவில்லை.

மீண்டும் யோவான் 14:30-ல், சாத்தான் இந்த உலகத்தின் இளவரசன் என்று இயேசு சொன்னார். இயேசு இந்த உலகத்திற்கு திரும்பி வரும் வரை சாத்தான் இந்த உலகத்தின் அதிபதியாக இருப்பான். இந்த உலகத்திலிருந்து உங்களிடம் எது வந்தாலும் அது அநீதியானது. நீங்கள்

பரிசுத்தப்படுத்தாமல் பணத்தை செலவழிக்க ஆரம்பித்தால், பொருளாசையின் ஆவி அதை ஆளுகிறது. ஆனால் நீங்கள் பரிசுத்தப்படுத்தும்போது, பத்தில் ஒரு பங்கை தேவனுக்கு கொடுப்பதன் மூலம், மீதமுள்ள தொண்ணூறு சதவிகிதம் பணம் சுத்தப்படுத்தப்பட்டு புனிதப்படுத்தப்படுகிறது. நீங்கள் அதை உண்மையாக கர்த்தருக்குக் கொடுத்திருக்கிறீர்கள், எனவே மீதமுள்ள பணம் தேவனால் பரிசுத்தமாக்கப்படுகிறது.

**லூக்கா 6:38 கொடுங்கள், அப்பொழுது உங்களுக்கும் கொடுக்கப்படும்; அமுக்கிக் குலுக்கிச் சரிந்து விழும்படி நன்றாய் அளந்து, உங்கள் மடியிலே போடுவார்கள்; நீங்கள் எந்த அளவினால் அளக்கிறீர்களோ அந்த அளவினால் உங்களுக்கும் அளக்கப்படுமென்றார்."**

***அறிக்கை: (வாய் விட்டு சொல்லவும்)***

***கொடுப்பேன், அது எனக்குக் கொடுக்கப்படும்***

எனவே நீங்கள் கொடுக்கும் வரை, உங்கள் செழிப்பு உங்களுக்கு இருக்காது. நீங்கள் பொருளாசையின் ஆவியின் பிடியிலிருந்து விடுவிக்கப்பட வேண்டும் என்று நான் விரும்புகிறேன். நம்மில் சிலருக்கு, காணிக்கை கொடுப்பது என்பது கடினமான நேரம். காணிக்கை என்பது ஆராதனையின் ஒரு பகுதியாகும். ஒவ்வொரு ஆராதனை நேரத்திலும், காணிக்கை கொடுக்கப்பட வேண்டும். நாம் கொடுக்கும்போது, அது நமக்கு கொடுக்கப்படும்!

உங்கள் எல்லா முடிவுகளிலும் பொருளாசையின் ஆவி தலையிடுவதால், உங்களிடம் பணம் இருக்கும், ஆனால் உங்களிடம் இருப்பதை நீங்கள் அனுபவிக்க முடியாது.

பொருளாசையின் ஆவி உங்களை வாழ அனுமதித்தால், நீங்கள் தேவனுடைய மகிமைக்காக வாழ்வீர்கள் எனவே அது உங்களை அடிமைப்படுத்த முயற்சிக்கிறது!

நீங்கள் கொடுக்காவிட்டால் தேவனுடையதை திருடுகிறீர்கள் என்று பழைய ஏற்பாடு கூறுகிறது. இவை ஆவிக்குரிய சட்டங்கள்! ஆவிக்குரிய விதிகளை நீங்கள் புரிந்துகொண்டு அதனுடன் இணைந்தவுடன், விஷயங்கள் சரியான இடத்தில் விழும். நான் கொடுக்கிறேனோ இல்லையோ, கடவுள் என்னை ஆசீர்வதிக்க மாட்டாரா? என்று நீங்கள் கேட்கலாம். இது தேவனைப் பற்றியது அல்ல; அது பொருளாசையின் ஆவியை பற்றியது. நீங்கள் கொடுக்கும் வரை, பொருளாசையின் ஆவி உங்களைப் பிடிக்கும்.

**மல்கியா 3: 8 மனுஷன் தேவனை வஞ்சிக்கலாமா? நீங்களோ என்னை வஞ்சிக்கிறீர்கள். எதிலே உம்மை வஞ்சித்தோம் என்கிறீர்கள். தசமபாகத்திலும் காணிக்கைகளிலுந்தானே.**

கடந்த ஆண்டு நான் உபவாசம் ஆரம்பித்தபோது, எங்கள் சபையில் ஒரு இயற்கைக்கு அப்பாற்பட்ட ஆவிக்குரிய நகர்வைக் காண விரும்பினேன், ஜெபம் செய்தேன். தேவன் என்னை வழிநடத்திய முதல் விஷயம், சில ஆண்டுகளாக நான் சேமித்ததைக் கொடுப்பது! கர்த்தர் என்னை வழிநடத்தியதால், நான் கிட்டத்தட்ட 4 லட்சங்களை வெவ்வேறு ஊழியங்களுக்கும், மக்களுக்கும் கொடுத்தேன். இரண்டு மாதங்களுக்குள் எங்கள் சபையில் அற்புதங்கள் மேல் அற்புதங்கள் நடக்கத் தொடங்கியது. எனக்கு 10 லட்சம் மதிப்புள்ள கார் கிடைத்தது. புதிய ஸ்பீக்கர்கள், புதிய கீ-போர்டு (Keyboard) மற்றும் டிரம்ஸ் (Drums) கிட்டத்தட்ட 4 லட்சம் மதிப்புள்ள பொருட்கள் ஒரு வாரத்திற்குள் கிடைத்தது.

தேவன் மீது நம்பிக்கை வைப்பதைப் பற்றி தேவன் எனக்குக் கற்றுக் கொடுத்தார்! ஆலயம் விரிவடைந்த பிறகு, மக்கள் வரத் தொடங்கினர். மேலும், சபையுடன் இணைந்த மக்களின் வாழ்க்கையில் ஆசீர்வாதம் வரத் தொடங்கியது. ஆலயத்தில் A.C, உள் அலங்காரங்களை செய்ய முடிந்தது. நாங்கள் ஆலயத்திற்கு ஒரு பஸ்ஸையும் வாங்கினோம். நான் கடவுளை நம்பி, அவர் என்ன செய்யச் சொன்னாரோ அதைச் செய்ததால், இப்போது நான் ஒரு உயிருள்ள சாட்சியாக நிற்கிறேன்.

நான் பொருளாசையின் ஆவியை உடைத்தபோது, அற்புதங்கள் நடக்க ஆரம்பித்தன. பொருளாசையின் ஆவியை உடைக்கும்போது, உங்கள் வாழ்க்கையில் பரலோகத்தின் வாயில்கள் திறக்கப்படும். பொருளாசை ஆவியின் முதுகெலும்பு உடையும் போது, நீங்கள் செழிக்கத் தொடங்குவீர்கள்!

***<u>அறிக்கை: (வாய் விட்டு சொல்லவும்)</u>***

***நான் கொடுக்கும்போது, பொருளாசையின் ஆவியை உடைக்கிறேன்.***

முன்பு நான் ஒரு சிறிய நிலத்தைத் தேடிக்கொண்டிருந்தேன், ஒரு சிறிய ஆலயத்தை கட்ட; ஆனால், பொருளாசையின் ஆவி உடைந்த பிறகு, 5 ஏக்கர் நிலத்தை எதிர்பார்க்கும்படி தேவன் என்னிடம் சொன்னார்.

***<u>அறிக்கை: (வாய் விட்டு சொல்லவும்)</u>***

***என் வாழ்க்கையில் பொருளாசையின் ஆவி உடைந்ததால் நான் பெரிய காரியங்களைத் தேடுகிறேன். நான் ஒருபோதும் ஒரே மாதிரியாக இருக்க மாட்டேன். நான் ஒருபோதும் வறுமையில் இருக்க மாட்டேன். நாம் மகிமையிலிருந்து மகிமைக்கு, வெற்றியில் இருந்து வெற்றிக்குச் செல்வோம்.***

## பொருளாசையின் ஆவி எவ்வாறு செயல்படுகிறது?

மத்தேயு 16: 13-20 இலிருந்து பின்வரும் வசனங்களைப் படிப்போம்

இங்கே, இயேசு மேசியா என்று பேதுரு அறிவிக்கிறார்!

**13. பின்பு, இயேசு பிலிப்புச் செசரியாவின் திசைகளில் வந்தபோது, தம்முடைய சீஷரை நோக்கி: மனுஷகுமாரனாகிய என்னை ஜனங்கள் யார் என்று சொல்லுகிறார்கள் என்று கேட்டார்.**

**14. அதற்கு அவர்கள்: சிலர் உம்மை யோவான் ஸ்நானன் என்றும், சிலர் எலியா என்றும், வேறு சிலர் எரேமியா, அல்லது தீர்க்கதரிசிகளில் ஒருவர் என்றும் சொல்லுகிறார்கள் என்றார்கள்.**

**15. அப்பொழுது அவர்: நீங்கள் என்னை யாரென்று சொல்லுகிறீர்கள் என்று கேட்டார்.**

**16. சீமோன் பேதுரு பிரதியுத்தரமாக: நீர் ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்றான்.**

**17. இயேசு அவனை நோக்கி: யோனாவின் குமாரனாகிய சீமோனே, நீ பாக்கியவான்; மாம்சமும் இரத்தமும் இதை உனக்கு வெளிப்படுத்தவில்லை, பரலோகத்திலிருக்கிற என் பிதா இதை உனக்கு வெளிப்படுத்தினார்.**

**18. மேலும் நான் உனக்குச் சொல்லுகிறேன், நீ பேதுருவாயிருக்கிறாய், இந்தக்கல்லின் மேல் என் சபையைக்கட்டுவேன்; பாதாளத்தின் வாசல்கள் அதை மேற்கொள்வதில்லை.**

**19. பரலோகராஜ்யத்தின் திறவுகோல்களை நான் உனக்குத் தருவேன்; பூலோகத்திலே நீ கட்டுகிறது எதுவோ அது பரலோகத்திலும் கட்டப்பட்டிருக்கும், பூலோகத்திலே நீ கட்டவிழ்ப்பது எதுவோ அது பரலோகத்திலும் கட்டவிழ்க்கப்பட்டிருக்கும் என்றார்.**

**20. அப்பொழுது, தாம் கிறிஸ்துவாகிய இயேசு என்று ஒருவருக்கும் சொல்லாதபடிக்குத் தம்முடைய சீஷர்களுக்குக் கட்டளையிட்டார்.**

நான் உங்களுக்கு இங்கே ஒரு எடுத்துக்காட்டு கொடுக்க விரும்புகிறேன். மேற்கண்ட வசனங்களில், பேதுரு வெளிப்படுத்தியதைக் கொண்டு தான் சபையைக் கட்டப் போவதாகவும், பரலோகராஜ்யத்தின் சாவியை பேதுருக்குக் கொடுப்பதாகவும் இயேசு கூறுகிறார். ஒரு வல்லமை நிறைந்த சூழ்நிலையை இங்கே காண்கிறோம். பேதுரு இப்போது உயர்ந்த நிலையில் உள்ளார். அவருக்கு பரலோகராஜ்யத்தின் சாவிகள் கொடுக்கப்பட்டுள்ளன. வசனங்களை தொடர்ந்து படிப்போம்

**21. அதுமுதல் இயேசு, தாம் எருசலேமுக்குப்போய், மூப்பராலும் பிரதான ஆசாரியராலும் வேதபாரகராலும் பல பாடுகள் பட்டு, கொலையுண்டு, மூன்றாம் நாளில் எழுந்திருக்கவேண்டும் என்பதைத் தம்முடைய சீஷர்களுக்குச் சொல்லத்தொடங்கினார்.**

**22. அப்பொழுது, பேதுரு அவரைத் தனியே அழைத்துக்கொண்டுபோய்: ஆண்டவரே, இது உமக்கு நேரிடக்கூடாதே, இது உமக்குச் சம்பவிப்பதில்லை என்று அவரைக் கடிந்துகொள்ளத் தொடங்கினான்.**

**23. அவரோ திரும்பிப் பேதுருவைப்பார்த்து: எனக்குப் பின்னாகப்போ, சாத்தானே, நீ எனக்கு இடறலாயிருக்கிறாய்; தேவனுக்கேற்றவைகளைச் சிந்தியாமல் மனுஷருக்கு ஏற்றவைகளைச் சிந்திக்கிறாய் என்றார்.**

21 ஆம் வசனத்தில், அவர் எருசலேமுக்குச் சென்று பரிசேயர்களின் கைகளில் துன்பப்பட்டு இறந்து, மூன்றாம் நாளில் உயிர்த்தெழுப்பப்பட வேண்டும் என்று இயேசு தம்முடைய சீஷர்களுக்கு விளக்கத் தொடங்கினார்.

இயேசு அவருடைய மரணத்தை முன்னறிவித்தபோது, பேதுரு அவரைத் தனியே அழைத்துக்கொண்டுபோய்: ஆண்டவரே, இது உமக்கு நேரிடக்கூடாதே, இது உமக்குச் சம்பவிப்பதில்லை என்று சொன்னார். இயேசு பேதுருவிடம் திரும்பி, “எனக்குப் பின்னாகப்போ, சாத்தானே, நீ எனக்கு இடறலாயிருக்கிறாய்; தேவனுக்கேற்றவைகளைச் சிந்தியாமல் மனுஷருக்கு ஏற்றவைகளைச் சிந்திக்கிறாய்” என்றார்.

இயேசு பரலோகராஜ்யத்தின் சாவியை பேதுருவிடம் கொடுத்தார், "இயேசு மேசியா, ஜீவனுள்ள தேவனுடைய குமாரன்" என்று பேதுரு வெளிப்படுத்தியதைப் பாராட்டினார். ஆனால் அடுத்த வசனத்தில், இயேசு, “தேவனுடைய ராஜ்யத்தைப் பற்றி கவலைப்படவில்லை” என்று பேதுருவைக் கண்டிப்பதைக் காண்கிறோம்.

வெளிப்பாடு என்ன ஆனது? நாம் இதைப் பற்றி சிந்திக்க வேண்டும். உங்கள் மனைவி அல்லது உறவினர்கள் ஜெப சிந்தையோடு இருந்தாலும், சில சமயங்களில் அவர்கள் பிசாசுடன் செயல்படுவதைப் போல் தோன்றலாம். தசமபாகம் கொடுப்பது அல்லது செலுத்துவது பற்றி பிரசங்கிப்பதை நீங்கள் கேட்கும்போது இது உங்களுக்கு

நிகழக்கூடும். இது பொருளாசையின் ஆவி. நீங்கள் பொருளாசையின் ஆவியை வைத்திருக்கவில்லை. ஆனால், அது ஒரு பொருளாசையின் ஆவியின் தாக்குதல்.

கொடுப்பது என்பது பெற வேண்டிய ஆவிக்குரிய சட்டம்! வேறு எந்த சட்டமும் இல்லை. இது உங்களுடன் சண்டையிடும் பொருளாசையின் ஆவி. கர்த்தருக்குக் கொடுங்கள், அப்பொழுது உங்களுக்குக் கொடுக்கப்படும். கொடுத்த மக்கள் தங்கள் அற்புதங்களைப் பெற்றார்கள், அவர்கள் ஆசீர்வதிக்கப்படுகிறார்கள். தசமபாகம் என்று வரும்போது, தேவன் உங்களை தசமபாகம் செலுத்துங்கள் என்று கூறுகிறார், ஒரு உணவகத்தில் பில் வரும்போது, எந்த தள்ளுபடியும் இல்லாமல் பணம் செலுத்துகிறீர்கள். பொருளாசை ஆவியின் வெளிப்பாடு உங்கள் மனதில் வந்து, அதன்படி நீங்கள் செயல்பட்டால் நீங்கள் செழிப்பீர்கள்!

***அறிக்கை: (வாய் விட்டு சொல்லவும்)***

***நான் செழிப்பேன். நான் வெற்றி பெறுவேன். நான் ஆட்சி செய்வேன். நான் பிரகாசிப்பேன். ஏனென்றால் நான் தேவனுடைய பிள்ளை, இயேசு கிறிஸ்துவின் பெயரால் பொருளாசையின் ஆவி உடைந்துவிட்டது!***

## கிறிஸ்துவுக்குள் நமது அடையாளம்

**பாகம் 2** **7th July 2019**

பொருளாசையின் ஆவி நம் அடையாளத்தை திருடுவதன் மூலம் நம்மில் செயல்படுகிறது.

**நம் அடையாளம் என்ன?**

நம்மைப் பற்றி ஒரு குறிப்பிட்ட அடையாளம் நம் மனதில் இருக்கலாம். நம்மை நாம் ஒரு ஆணாகவோ அல்லது பெண்ணாகவோ அடையாளம் காணலாம் அல்லது பணியிடத்தில் உள்ள பெயருடன் நம்மை அடையாளம் காணலாம். நாம் யார்? நாம் எப்படி பட்டவர்கள் என்பதன் மூலம் நம்மை நாமே அடையாளம் காண்கிறோம்.

யோவான் ஸ்நானகனால் இயேசு ஞானஸ்நானம் பெற்ற பிறகு, வானம் திறந்தது, பரிசுத்த ஆவியானவர் புறாவைப் போல அவர்மீது இறங்கினார், வானத்திலிருந்து ஒரு குரல், "இவர் என்னுடைய நேசகுமாரன், இவரில் பிரியமாயிருக்கிறேன் " என்று கூறினார். ஆகவே இயேசுவின் அடையாளம் அங்கே நிறுவப்பட்டது!

ஞானஸ்நானம் பெற்ற பிறகு, இயேசு வனாந்தரத்தில் 40 பகலும் 40 இரவும் உபவாசம் இருந்தார். உபவாசம் முடிந்த பிறகு பிசாசானவன் இயேசுவின் முன் தோன்றி அவரை சோதித்தான். இயேசுவின் மூன்று சோதனைகள் வேதத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளன. பிசாசு அவரை சிறிது காலம்

விட்டுவிட்டான் என்று வேதம் சொல்கிறது. அதாவது இயேசுவை சோதிக்க பிசாசு மீண்டும் வந்திருக்கலாம்.

பிசாசு இயேசுவிடம் "நீர் தேவனுடைய குமாரனேயானால், இந்தக் கற்களும் அப்பங்களாகும்படி சொல்லும்" என்றான். இது இயேசுவின் முதல் சோதனையாகும். இது பொருளாசையின் ஆவி. நாற்பது நாட்கள் உபவாசத்திற்கு பிறகு, பிசாசு இயேசுவை வாசலில் வரவேற்று, அவர் தேவகுமாரன் என்பதை நிரூபிக்கும்படி கேட்டான். எனவே முதல் சோதனையே அடையாளத்தை நிரூபிக்கும் படி அமைந்தது.

இயேசு தேவகுமாரன் என்பதை நிரூபிக்கும்படி பிசாசு சவால் விடுத்தான்.

**மத்தேயு 4: 3** அப்பொழுது சோதனைக்காரன் அவரிடத்தில் வந்து: நீர் தேவனுடைய குமாரனேயானால், இந்தக் கல்லுகள் அப்பங்களாகும்படி சொல்லும் என்றான்.

பொருளாசையின் ஆவி என்பது பணத்தை கட்டுப்படுத்தும் மற்றும் பணத்தால் எதையும் சாதிக்க முடியும் என்று கூறும் ஆவி. பணம் உண்ண உணவு உடுக்க உடை இருக்க இடம் ஆகிய அன்றாட தேவைக்கு அவசியமானது. ஆனால் அது நம்மை கட்டுப்படுத்த முடியாது. பொருளாசையின் ஆவிதான் வனாந்தரத்தில் இயேசுவைத் சோதித்தது. ஆனால் இயேசு, “மனுஷன் அப்பத்தினாலேமாத்திரமல்ல, தேவனுடைய வாயிலிருந்து புறப்படுகிற ஒவ்வொரு வார்த்தையினாலும் பிழைப்பான் என்று எழுதியிருக்கிறதே என்றார். இயேசு தம் அடையாளத்தை அறிந்திருந்தார். அவர் தேவனிடம் இருந்து வந்த ஆவி என்ற அடையாளத்துடன் செயல்பட்டு வந்தார்.

***<u>அறிக்கை: (வாய் விட்டு சொல்லவும்)</u>***

***என் அடையாளம் மாம்சத்தில் இல்லை. எனது அடையாளம் சரீரத்தில் இல்லை. எனது அடையாளம் ஆவியில் உள்ளது.***

பொருளாசையின் ஆவி உங்கள் அடையாளத்தை எல்லா நேரத்திலும் சீர்குலைக்கிறது. உங்கள் அடையாளம் என்பது உங்கள் நோய், உங்கள் தொழில், உங்கள் தோல்விகள், உங்கள் சம்பளம், உங்கள் கடன்கள் அல்லது உங்கள் EMI ஆக இருக்கலாம். எல்லா சிக்கல்களும் உங்கள் அடையாளமாகின்றன. உங்கள் ஆத்மாவின் மீதான அழுத்தத்தின் காரணமாக, நீங்கள் இயேசுவால் மீட்கப்பட்ட ஆவி என்ற உண்மையை மறந்து விடுகிறீர்கள்.

பொருளாசையின் ஆவியைக் மேற்கொள்ள உங்கள் அடையாளத்தை நீங்கள் அறிந்து கொள்ள வேண்டும். நீங்கள் உங்களை அடையாளம் கண்டவுடன், பொருளாசையின் ஆவி அதன் சக்தியை இழக்கிறது. உங்களை நீங்கள் செய்யும் வேலை, பெறும் சம்பளம் மற்றும் உங்கள் தோற்றத்தினால் அடையாளம் காணக்கூடாது. நீங்கள் செலுத்தும் ஈ.எம்.ஐ அல்லது உங்கள் கண்ணோட்டத்தால் நீங்கள் அடையாளம் காணப்படவில்லை. நீங்கள் தேவனுடைய பிள்ளை, உங்கள் ஆவி இயேசுவில் உயிரோடு இருக்கிறது, அது துடிப்பானது, அது பரிசுத்த ஆவியின் பலத்தால் உந்தப்படுகிறது. ஆவியில் வாழ அழைக்கப்பட்டு இருக்கிறோம்.

***<u>அறிக்கை: (வாய் விட்டு சொல்லவும்)</u>***

***நான் ஒரு மீட்கப்பட்டஆவி. நான் தேவனுடைய பிள்ளை. இதுவே எனது அடையாளம்!***

உலகத்துக்கும் நமக்கும் உள்ள வித்தியாசம் என்னவென்றால், நம்முடைய ஆவி உயிருடன் இருக்கிறது. மனிதர்கள் உடல், ஆன்மா மற்றும் ஆவி ஆகியவற்றைக்

கொண்டுள்ளனர். இந்த உலகில் வேறு எந்த மனித ஆவியும் உயிரோடு இல்லை. கிறிஸ்து இல்லாத மற்றவர்கள் வெறும் உடல், ஆன்மா மற்றும் இறந்த ஆவி என வாழ்கின்றனர்.

இயேசுவை நம்முடைய இரட்சகராக ஏற்று கொள்ளும் பொழுது நம்முடைய ஆவி உயிர்பிக்கப்படுகிறது. நாம் ஒரு உயிருள்ள ஆவி ஆகிறோம். மற்ற சமய குருக்களும் ரிஷிகளும் உலகளாவிய ஆத்மாக்கள் மற்றும் ஆத்ம சாதனைகள் பற்றி பேசுகிறார்கள், ஆன்மாவுடன் இணைகிறார்கள். அவர்களுக்கு ஆவி பற்றி ஒரு வெளிப்பாடு இல்லை. ஆவியைப் பற்றி பேசும் ஒரே குழு கிறிஸ்தவர்கள். ஆவியைப் பற்றி பேசும் ஒரே புத்தகம் பரிசுத்த வேதாகமம். குருக்களும் ரிஷிகளும் அவர்கள் எஜமானாகிய பிசாசினால் கற்பிக்கப்படுகிறார்கள். நாமோ நம்முடைய எஜமானர்-பரிசுத்த ஆவியானவரால் கற்பிக்கப்படுகிறோம்.

பிசாசு நம்மைத் தொட முடியாது, ஏனென்றால் நாம் இயேசுவில் இருக்கிறோம். பிசாசு உடலையும் ஆன்மாவையும் தொட முடியும், ஆனால் அவனால் நம் ஆவியைத் தொட முடியாது. நம்முடைய ஆவி பரிசுத்த ஆவியினால் அழியாமல் முத்திரையிடப்பட்டு நமக்குள் வைக்கப்பட்டுஉள்ளது. இயேசுவை அறியாத மக்கள் மரித்த ஆவியை கொண்டவர்களாய் ஓடுகிறார்கள். அவர்களின் ஆவி இறந்துவிட்டது. அவர்கள் பின்பற்றும் ஆவி அவர்களுடைய ஆவியை தொட முடியாது. அது அவர்களின் ஆன்மாவையும் உடலையும் மட்டுமே தொட முடியும். பேய் பிடித்த மனிதர்களை நாம் பார்த்திருக்கலாம், அவர்களின் மனமும் உடலும் அவர்களின் புலன்களுக்கு அல்லது கட்டுப்பாட்டிற்கு வெளியே இருக்கும். ஆனால் அவர்களுடைய ஆவியை தொட முடியாது, அதை இயேசுவின் ஆவியைத் தவிர வேறு எந்த ஆவியினாலும் தொட முடியாது.

இயேசு கிறிஸ்து நம்முடைய ஆவியைத் தொட்டு, நம்மை மீண்டும் உயிர்ப்பித்து உள்ளார் என்பதை அறிந்து கொள்வதில் நமது அடையாளமாக இருக்கிறது. நாம் ஒரு உயிருள்ள ஆவி. ஆதாம் தேவனுக்கு கீழ்ப்படியாதபோது, அவர் தேவனோடுடைய தொடர்பை இழந்தார், அதாவது அவருடைய ஆவி கடவுளிடமிருந்து துண்டிக்கப்பட்டது. இரண்டாவது ஆதாம் என்று அழைக்கப்படும் இயேசு கிறிஸ்துவின் மூலம், நம்முடைய ஆவிகள் உயிர்பிக்கப்படுகின்றன. ஆதாம் இழந்ததை, இயேசு நமக்காக திரும்பப் பெற்றார்.

நம்முடைய அடையாளம் கடவுளின் ஆவியில்தான் இருக்கிறது என்பதை அறிந்தவுடன், பொருளாசையின் ஆவி நம்மீது அதிகாரத்தை இழக்கிறது. நமக்கு பணம், புகழ், கார் மற்றும் வீடு தான் எல்லாம் என்று நாம் நம்பும் வரை, பொருளாசையின் ஆவி நம்மைத் தூண்டும். பணம் ஒன்றுமில்லை என்பதை நாம் புரிந்துகொள்ளும் தருணம், நம் வாழ்வின் மீது ஆதிக்கம் கொண்டுள்ள பொருளாசையின் ஆவி சிதைகிறது.

**பணம் மற்றும் ஆசீர்வாதம்**

பணம் ஒரு ஆசீர்வாதம் என்று மக்கள் நினைக்கிறார்கள். ஆனால் **உண்மை என்னவென்றால் "ஆசீர்வாதம் பணத்தைக் கொண்டுவருகிறது".** ஏசாவையும் யாக்கோபையும் ஆதியாகமம் புத்தகத்தில் காண்கிறோம். ஏசா உயரமானவர், வலிமையான போர்வீரன். அவர் தந்தையின் செல்ல மகனாக இருந்தார். அந்த நாட்களில் வலுவான மற்றும் பெரிய மக்கள் மகிமைப்படுத்தப்பட்டனர். ஆகவே, ஏசா பெரியவனாகவும் வலிமையாகவும் இருந்ததால் ஆசீர்வாதங்களைப் பற்றி கவலைப்படவில்லை. இருப்பினும், தந்தையின் ஆசீர்வாதம் முதற்பேறான ஏசாவுக்கு சொந்தமானது. எனவே சட்டப்படி யாக்கோபால் தன் தந்தையின் ஆசீர்வாதத்தைப் பெற முடியாது. ஆனால் அவர்

தனது தந்தையின் ஆசீர்வாதங்களை விரும்பினார். ஆசீர்வாதங்களைப் பெற அவர் தனது தந்தையை ஏமாற்றினார்.

தந்தை மூத்த சகோதரனாகிய ஏசாவிடம் தனக்கு பிரியமான உணவைப் வேட்டையாடி சமைத்து கொண்டுவர சொன்னார், அதனால் அவர் சாப்பிட்டு ஆசீர்வதிக்க முடியும். இதை யாக்கோபின் தாயார் கேட்டார். யாக்கோபு தாயின் செல்லப்பிள்ளை. வேட்டைக்குச் சென்ற மூத்தவர் வருவதற்குள் தந்தையை ஏமாற்ற அவள் திட்டமிட்டாள். ஏசா வீட்டிற்கு திரும்பி வருவதற்கு முன்பு, யாக்கோபு உணவை தன் தந்தையிடம் எடுத்துச் சென்றார். தந்தை உணவைச் சாப்பிட்டு, முதலில் பிறந்த ஏசாவை ஆசீர்வதிப்பதாக நினைத்து யாக்கோபை ஆசீர்வதித்தார். தன் சகோதரனை ஏமாற்றினால்தன் உயிரை காப்பாற்ற ஓட வேண்டும் என்று யாக்கோபு அறிந்தான்.

ஏசா வலிமையானவன், தன்னைக் கொன்றுவிடுவான் என்றும் தெரிந்திருந்தும், யாக்கோபு தன் தந்தையின் ஆசீர்வாதங்களை விரும்பினான். அந்தப்படியே ஏமாற்றி உணவளித்து யாக்கோபு தந்தையின் ஆசிர்வாதத்தை பெற்றுக்கொண்டான். என்ன நடந்தது என்று தெரிந்த பிறகு, யாக்கோபின் தந்தை ஏசாவிடம் நீ மேற்கொள்ளும் காலம் வரும்போதோ, உன் கழுத்தில் இருக்கிற அவனுடைய நுகத்தடியை முறித்துப்போடுவாய் என்றும் கூறினார். யாக்கோபைத் தன் தகப்பன் ஆசீர்வதித்ததினிமித்தம் ஏசா யாக்கோபைப் பகைத்து: என் தகப்பனுக்காகத் துக்கிக்கும் நாட்கள் சீக்கிரமாய் வரும், அப்பொழுது என் சகோதரனாகிய யாக்கோபைக் கொன்றுபோடுவேன் என்று ஏசா தன் இருதயத்திலே சொல்லிக் கொண்டான்.யாக்கோபு ஏற்கனவே இதை அறிந்திருந்தான், அவர் நிலம், கால்நடைகள் மற்றும் சொத்துக்களை விட்டுவிட்டு ஆசீர்வாதத்துடன் ஓட வேண்டியிருந்தது.

இந்த நாட்களைப் போலன்றி, அந்த நாட்களில் நீங்கள் சுவிஸ் வங்கியில் ஆன்லைனில் பணத்தை மாற்ற முடியாது. உங்கள் ஒட்டகம், தானியங்கள், ஆடுகளை எடுத்துச் செல்ல வேண்டும். எனவே அவர் தந்தையின் ஆசீர்வாதத்தை எடுத்துக் கொண்டு ஓடினார்.

அன்புள்ள சபையோரே, யாக்கோபு தனது தந்தையின் ஆசீர்வாதங்களைப் வார்த்தைகளாக பெற்றார். அவர் பணம், தங்கம், ஒட்டகம் மற்றும் எல்லாவற்றையும் விட்டுவிட்டார். ஆபிரகாமுக்கும் மற்றவர்களுக்கும் இருந்த சொத்து, அது ஏசாவிற்கு வந்தது. யாக்கோபு எதையும் எடுக்கவில்லை. மாம்சத்திற்குரிய ஆசீர்வாதத்தை தன்னால் சுமக்க முடியாது என்பதை அவர் அறிந்திருந்தார். ஆனால் தந்தையின் ஆசீர்வாதத்திற்காக அவர் தாகம் அடைந்தார்.

ஆசீர்வாதம் ஒட்டகம், ஆடு, வெள்ளி, தங்கம் அல்ல. ஆசீர்வாதம் என்பது உங்களிடம் இருக்கும் பட்டம் அல்லது பணம் என்பது அல்ல.

ஆசீர்வாதமான வார்த்தையை சுமந்துகொண்டு யாக்கோபு தனது வாழ்க்கைக்காக ஓடினார்.

இன்றைய தரத்தின்படி, ஆசீர்வாதம் தந்தையின் நிலம், வீடு மற்றும் தங்கம். தங்கம், ஒட்டகம், நிலம் ஆகியவற்றின் மதிப்பு யாக்கோபுக்குத் தெரியாது என்று ஏசா நினைத்தான். அவர் வார்த்தையை மட்டுமே சுமந்து எல்லாவற்றையும் விட்டுவிட்டார் என்றும் யாக்கோபு முட்டாள் என்றும் அவர் நினைத்தார். யாக்கோபு விட்டுச் சென்ற எல்லா ஆசீர்வாதங்களையும் தன்னால் அனுபவிக்க முடியும் என்று அவர் நினைத்தார். ஆனால் யாக்கோபு ஆசீர்வாதங்களை தன்னுடன் எடுத்துச் சென்றார் என்பது அவருக்குத் தெரியாது. கையில் எதுவும் இல்லாமல் யாக்கோபு வெகுதூரம் சென்றார், ஆனால் தந்தை அவனைப் பற்றி பேசியது அவருடைய ஆவிக்குரியது. அதை அவர் தனது ஆவியால் சுமந்தார். சில

வருடங்களுக்குப் பிறகு, கர்த்தரால் ஆசீர்வதிக்கப்பட்ட 12 பிள்ளைகளும் ஒரு பெரிய படை போன்ற வேலையாட்களையும் ஆடு மாடுகளையும் கொண்டு மீண்டும் வந்தார், ஆனால் ஏசா கர்த்தரால் ஆசீர்வதிக்கப்படவில்லை, அவருடைய குடும்பத்தாரும் வேதத்தில் கணக்கிடப்படவில்லை.

***அறிக்கை: (வாய் விட்டு சொல்லவும்)***

***பணம் ஆசீர்வாதம் அல்ல, ஆனால் ஆசீர்வாதம் பணத்தை தருகிறது***

**நீதிமொழிகள்:10:22 கர்த்தரின் ஆசீர்வாதமே ஐசுவரியத்தைத் தரும்; அதனோடே அவர் வேதனையைக் கூட்டார்.**

***அறிக்கை: (வாய் விட்டு சொல்லவும்)***

***தேவனே என்னை ஆசீர்வதியும் எனது எல்லையை விரிவாக்கும்***

இன்று நீங்கள் ஆசீர்வதிக்க பட விரும்பினால், நீங்கள் அதைப் பெறுவீர்கள்! பணக்காரனாக இருப்பது ஒரு ஆசீர்வாதம் அல்ல. ஆசீர்வாதம் பணத்திற்கு அப்பாற்பட்டது. அது பணம் மட்டும் அல்ல. ஆசீர்வாதம் பணத்தினால் வாங்கக்கூடிய எதற்கும் அப்பாற்பட்டது. வீடு, வேலை, பணம், நல்ல சம்பளம் ஆகியவை ஆசீர்வாதம் என்று நாங்கள் நினைக்கிறோம். நாம் அப்படி நினைத்தால், அது பொருளாசையின் ஆவி.

நீங்கள் ஒரு காரை வாங்கும்போது, அது ஆறுதலுக்காக மட்டுமல்ல, அதனுடன் உங்களுக்கு ஒரு அடையாளம் இருக்கிறது. உங்களிடம் உள்ள விஷயங்கள் மற்றும்

உங்களை நீங்கள் எவ்வாறு காண்பிக்கிறீர்கள் என்பதோடு உங்களை இணைக்கிறீர்கள். அதுதான் பொருளாசையின் ஆவி. உங்கள் பணம் வாங்கக்கூடிய விஷயங்களில் உள்ளது.

யாக்கோபு இதை ஆவியில் அறிந்திருந்தார், ஆனால், ஏசா ஆவியில் அதை இழந்தார். யாக்கோபு அவருடன் ஆசீர்வாதங்களை எடுத்துச் சென்றார். ஏசா எல்லா சொத்துகளையும் வைத்திருந்தான், ஆனால் அவன் சபிக்கப்பட்டான். அவரால் வாழ்க்கையில் எதையும் செய்ய முடியவில்லை. ஆனால் யாக்கோபு எல்லாவற்றையும் இழந்துவிட்டதாகத் தெரிகிறது, ஆனால் அவர் ஆசீர்வாதத்தை பெற்றுக்கொண்டான்.

நீங்கள் ஆசீர்வாதத்தை சுமக்கும்போது எந்த துக்கமும் இருக்காது, உங்களுக்கு அமைதி, மகிழ்ச்சி, பொறுமை, அன்பு மட்டுமே இருக்கும், மேலும் நீங்கள் உங்கள் குடும்பத்தை நேசிப்பீர்கள். உங்கள் இளமையின் மனைவியுடன் உங்கள் வாழ்க்கையை அனுபவிப்பீர்கள். இது ஒரு ஆசீர்வாதம். வேலை முடிந்து ஒவ்வொரு நாளும் வீடு திரும்புவதை நீங்கள் விரும்புகிறீர்களா அல்லது "ஆண்டவரே, ஆண்டவரே என்னைக் காப்பாற்றுங்கள்"என்று புலம்புகிறீர்களா?

நீங்கள் கர்த்தருடைய ஆசீர்வாதங்களைப் பெறும்போது, உங்கள் பிள்ளைகள் உங்களை 'ஆசீர்வதிக்கப்பட்டவர்கள்' என்று அழைப்பார்கள், நீங்கள் சமூகத்தில் மதிக்கப்படுவீர்கள், மேலும் நீங்கள் கடவுளின் நியமிக்கப்பட்ட குடும்பம் என்று அழைக்கப்படுவீர்கள். உங்கள் இளமை மற்றும் உங்கள் வயதான நாட்களை நீங்கள் அனுபவிப்பீர்கள்.

நீங்கள் எவ்வளவு ஓய்வூதியம் பெறுகிறீர்கள் என்பது பற்றியது அல்ல, உங்களிடம் எவ்வளவு மருத்துவ காப்பீடு உள்ளது என்பதும் அல்ல. உங்களிடம் மிகப்பெரிய மருத்துவ

காப்பீடு இருந்தால், நீங்கள் குளிரூட்டப்பட்ட வார்டில் இறந்துவிடலாம் அல்லது உங்களுக்கு மருத்துவ காப்பீடு இல்லையென்றால் உங்கள் கடைசி நாட்களை அரசு மருத்துவமனையில் கழிக்கலாம். எனவே மருத்துவ காப்பீடு என்பது ஒரு ஆசீர்வாதம் அல்ல. இது ஒரு பாதுகாப்பான உணர்வு.

பொருளாசையின் ஆவி நம்மில் செயல்படுகிறது, பணம் எல்லாம் என்று நம்ப வைக்கிறது. இது ஒரு தீய ஆவி, இந்த அடையாளத்தை நாம் பணத்தால் உடைக்க வேண்டும்.

காணிக்கை கொடுக்கும்போது, நம்மில் பலர் தீர்க்கதரிசனமாக மாறுகிறோம். பலர் மிகச்சிறிய தொகையை கையில் எடுக்க முனைகிறார்கள். அதுதான் உங்களில் வேலை செய்யும் பொருளாசையின் ஆவி. எல்லா தீமைகளுக்கும் மூலமே பணத்தை நேசிப்பது. ஒரு கார் அல்லது வீடு இருப்பது பணத்தின் மீதான அன்பு அல்ல. கடவுளின் பிள்ளை எவ்வாறு வாழ முடியும், பணக்காரர், வளமானவர் என்பதை நாம் உலகுக்குக் காட்ட வேண்டும். ஆனால், காணிக்கை கொடுப்பதற்காக பணத்தை விட்டுவிட முடியாவிட்டால், அதுதான் பணத்தின் மீதான அன்பு. அது ஒரு அடையாள நெருக்கடி.

**1தீமோத்தேயு 6:10 10. பண ஆசை எல்லாத் தீமைக்கும் வேராயிருக்கிறது; சிலர் அதை இச்சித்து, விசுவாசத்தைவிட்டு வழுவி, அநேக வேதனைகளாலே தங்களை உருவக் குத்திக்கொண்டிருக்கிறார்கள்.**

நீங்கள் எவ்வளவு தியாகம் செய்கிறீர்களோ, அவ்வளவுதான் உங்கள் பலிபீடமும் பலமடைகிறது!

உங்கள் பலிபீடம் உங்கள் வாழ்க்கையில் ஆன்மீக வலிமையைக் கொண்டுவருகிறது. பொருளாசையின் ஆவி உங்கள் மீது வரும்போது, நிராகரிக்கும் ஆவி உங்கள் மீது வருகிறது.

நம் அடையாளத்தை மாற்றுவதன் மூலம் பொருளாசையின் ஆவி உடைக்கிறோம். கர்த்தருடைய ஆசீர்வாதங்களும் அவருடைய வார்த்தைகளும் நம்மீது உள்ளன. தேவனின் மீட்கப்பட்ட ஆவி. தேவனுடைய பிள்ளை . தேவனிடமிருந்து வந்த ஆவி. நீங்கள் ஒன்று பேராசையின் ஆவிக்கு சேவை செய்யலாம் அல்லது கர்த்தருக்கு சேவை செய்யலாம். முழு இருதயத்தோடு தேவனை சேவிக்க முடிவு செய்யுங்கள்.

***அறிக்கை: (வாய் விட்டு சொல்லவும்)***

**நான் தேவனை சேவிப்பேன். நான் தேவனுடைய பிள்ளை. இது எனது அடையாளம்.**

## சபிக்கப்பட்ட சூழலில் வாழும் மனிதன்

**பாகம் 3** **14 July 2019**

நமது மனம் தான் போர்க்களம். நம்முடைய போர்களை நாம் மனதில் வென்றால், கர்த்தருடைய ஆசீர்வாதங்கள் உடல் ரீதியாக வெளிப்படும், நோய்கள் மற்றும் சாபங்கள் நம் உடலில் வெளிப்படாது! மாறாக, நம் போர்களை மனதில் இழந்தால், நோய்கள் மற்றும் சாபங்கள் நம் உடலில் வெளிப்படும்.

பொருளாசையின் ஆவி நம்மை பணத்திற்குப் பின் ஓட வைக்கிறது! நாம் பணத்தைத் தொடர்ந்து ஓடிச் சம்பாதித்தாலும் திருப்தி அடைய மாட்டோம். நாம் எவ்வளவு பணம் சம்பாதித்தாலும், அந்த ஆவி பணத்தை நம்மிடமிருந்து விலக்கி, பலவீனராக உணர வைக்கிறது.

நாம் லட்சங்கள் சம்பாதித்தாலும், வாழ்க்கையில் அமைதியும் திருப்தியும் நமக்கு இருக்காது. பணம் இந்த உலகத்திலிருந்து வருகிறது. இந்த உலகில் உள்ள அனைத்தும் சபிக்கப்பட்டவை, மற்றும் சாத்தானின் சக்தியின் கீழ்

உள்ளன. பொருளாசையின் ஆவி நம்மீது இயங்குகிறது. பண ஆசையிலிருந்து நாம் விடுபடாவிட்டால், அல்லது பணத்தை நம்பியிருந்தால், பொருளாசையின் ஆவியின் அதிகாரத்தின் கீழ் இருக்கிறோம். அந்த மனப்பான்மையின் கீழ் நம் மனம் செயல்படும் வரை, பொருளாசையின் ஆவி நம் பணத்தை வீணடிக்கும் சூழ்நிலைகளையும் சவால்களையும் உருவாக்குகிறது. நாம் பணத்தை நேசிக்கிறோம், அதைச் சார்ந்து, பணம் எல்லாம் என்று நினைத்து, பொருளாசையின் ஆவிக்கான கதவைத் திறக்கிறோம். இந்த ஆவி நமக்குத் தெரியாமல் கூட நம் பணத்தை வீணடிப்பதற்கான சூழ்நிலைகளையும் சவால்களையும் உருவாக்கும்.

நீங்கள் பணம் சம்பாதிக்கும் தீய சுழற்சியில் இறங்குகிறீர்களா? அப்படியானால், நாள் முடிவில் நம் மகிழ்ச்சி, அமைதி, பொறுமை மற்றும் நல்ல தூக்கத்தை இழக்கிறோம். கர்த்தர் நமக்காக வைத்திருக்கும் நம்பிக்கையையும் பாதுகாப்பையும் இழக்கிறோம்.

கர்த்தர் நமக்கு வாக்குறுதியளித்ததையும், அவர் நமக்காக ஆயத்தம் பண்ணினதை புரிந்துகொள்வதற்கும் பெறுவதற்கும் கர்த்தருடைய ஞானம் இருப்பது அவசியம். இதை புரிந்து கொள்வதற்கு கர்த்தர் நம்முடைய அறிவுக்கண்களைத் திறக்க வேண்டும் என்று பிரார்த்திக்கிறேன். ஆமென்!

யாக்கோபின் வாழ்க்கையிலிருந்து ஒரு விளக்கத்தைப் பார்ப்போம். யாக்கோபு வேறு எந்த உடைமைகளையும் விட தேவனுடைய ஆசீர்வாதங்களைத் தேர்ந்தெடுத்தார். உடைமைகள் இல்லாத ஆசீர்வாதங்கள் என்ன என்று நாம் நினைத்தால், நம் கண்கள் குருடாயிருக்கின்றன! பொருளாசையின் ஆவி நம்மை அப்படித்தான் பிணைக்கிறது. யாக்கோபு எல்லா உடைமைகளையும்

விட்டுவிட்டார். அவர் தனது தந்தையின் ஆசீர்வாதங்களைப் பெற்று வெறுங்கையுடன் போனார்.

ஆசீர்வாதம் என்றால் என்னவென்று நமக்குப் புரியவில்லை என்றால், நாம் வெறுங்கையுடன் நடந்தாலும், இதன் பொருள் நம் கண்களுக்கு மறைக்கப்பட்டிருக்கிறது, ஆகையால் நாம் போராடுகிறோம். இது நமக்கு புரியாத ஒரு உண்மை. நீங்கள் போதுமான அளவு சம்பாதிக்கவில்லை என்றும், மற்றவர்களைப் போல நீங்கள் அதிகம் சம்பாதித்தால் உங்கள் வாழ்க்கையை அனுபவிக்கலாம் என்றும் நினைக்கலாம். இல்லை. நீங்கள் ஒரு கானல் நீரைத் தேடுகிறீர்கள்.

தேவனுக்கு உண்மையாக இருந்த ஒருவரை நான் அறிவேன். அவர் கோடிகள் சம்பாதித்தும் மெதுவாக கடவுளிடமிருந்து விலகிச் சென்றார். அவரைப் பொறுத்தவரை பணம் எல்லாம் ஆனது. இப்போது அவருக்கு கர்த்தருடன் எந்த தொடர்பும் இல்லை, மகிழ்ச்சியையும் அமைதியையும் இழந்தார். பிறகு அவர் தொடங்கிய இடத்துக்கே திரும்பி வந்துள்ளார்!

ஒரு போதகராக இருப்பதால், அரண்மனைகள் போன்ற பெரிய வீடுகளில் தங்கியிருக்கும் ஜனங்களை சந்திக்கும் பாக்கியம் எனக்கு உண்டு. அவர்கள் வீட்டுக்குள் அலங்கார நீரூற்று கூட இருக்கும். அவர்களின் வீடுகள் ஏதேன் தோட்டம் போல இருக்கும், மேலும் விலை உயர்ந்த கார்களைக் கொண்டிருக்கும். ஆனால் நான் அவர்களின் வீடுகளுக்குள் நுழையும் போது, சிம்மாசனத்தில் அமர்ந்திருக்கும் பொருளாசையின் ஆவியை என்னால் காணமுடிகிறது. அமைதியும் மகிழ்ச்சியும் இல்லாமல் அவர்களைப் பார்ப்பது ஒரு பயங்கரமான சூழ்நிலையாக இருக்கும். பயம், குழப்பம், போட்டி மற்றும் நோய் மட்டுமே ஆதிக்கம் செலுத்துகிறது. பிள்ளைகள் பெற்றோருக்கு பயப்படுவார்கள், பெற்றோர்கள் பிள்ளைகளை பார்த்து பயப்படுவார்கள், வேலைக்காரர் எஜமானுக்கு பயப்படுவார்கள். அங்குள்ள அனைவரும் ஒருவருக்கொருவர் ஏமாற்றவும் கொல்லவும்

முயற்சிக்கிறார்கள். நான் அங்கு கவலை மற்றும் பதற்றம் மட்டுமே பார்க்க முடியும். எங்கள் வீட்டின் அருகே தங்க விரும்பிய ஒரு செல்வந்தரை நான் அறிவேன், ஏனென்றால் அவருடைய குடும்ப உறுப்பினர்கள் தனது செல்வத்திற்காக அவரைக் கொல்லக்கூடும் என்று அவர் அஞ்சினார். அவர் தனது வாழ்க்கையை அனுபவிக்கவில்லை, அவரிடம் இருந்த செல்வம் ஒரு ஆசீர்வாதம் அல்ல. சில மாதங்களுக்குப் பிறகு, அவரது மரணம் குறித்து கேள்விப்பட்டேன்.

பணம் மகிழ்ச்சியைத் தராது. பணம் நம் வாழ்க்கையை வடிவமைக்கவோ அல்லது உருவாக்குவதோ இல்லை. நீங்கள் இவ்வாறு நினைக்கலாம், எங்களிடம் நிறைய பணம் மற்றும் காப்பீடு உள்ளது, எங்கள் குழந்தைகளுக்கு பணம் கிடைக்கும் என்று, ஆனால் நீங்கள் பொருளாசையின் ஆவியிலிருந்து விடுவிக்கப்படாவிட்டால் உங்கள் நிகழ்காலத்தை அனுபவிக்க மாட்டீர்கள். நம் மனம் எப்போதுமே பணம் மற்றும் பணம் சம்பாதிப்பது போன்ற எண்ணங்களால் தாக்கப்படலாம். பணம் ஒரு வேலைக்காரன், அது ஒரு எஜமான் அல்ல. பணம் சேவை செய்வதற்கு பயன்படுத்தப்பட வேண்டும்.

யாரோ ஒருவர் ஓட்டும் கார் அல்லது அவர்கள் அணியும் ஆடைகள் காரணமாக அவர்கள் ஆசீர்வதிக்கப்பட்டவர்கள் என்று நினைத்தால், நீங்கள் இன்னும் அடையாள நெருக்கடியில் செயல்படுகிறீர்கள். குடும்பத்தில் மகிழ்ச்சி மற்றும் அமைதி இல்லாததற்கு காரணம் போதிய பணம் இல்லை என்று நாம் நினைக்கலாம். எங்கள் அடையாள நெருக்கடியை சரிசெய்ய வேண்டிய நேரம் இது. நாம் யார் என்று தெரியாவிட்டால், வறுமையில் செயல்படுவோம். நாம் இருக்கும் இடத்திலிருந்து நாம் உயர முடியாது. நம்முடைய அழைப்பை நாம் அறிந்து கொள்ள வேண்டும், அவர் நம்மை எப்படிப் பார்க்கிறார் என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும்.

கடவுள் நமக்கு வைத்திருக்கும் எதிர்காலத்தை நாம் அறிந்து பின்னர் அந்த திசையில் செல்ல வேண்டும்.

தேவனுடைய ராஜ்யத்தில் பணம் ஒரு "தேவைகளை பூர்த்தி செய்யும் பொருளாக" அழைக்கப்படுகிறது. நம்முடைய தேவைகள் அனைத்தும் அந்தப்பொருள் தான்! நாம் சரியான திசையில் நடக்க ஆரம்பித்ததும், அந்த ஆசிர்வாதம் நம்மைப் பின்தொடரும்.

***<u>அறிக்கை: (வாய் விட்டு சொல்லவும்)</u>***

***நான் தொடர்ந்து நடப்பேன். எனது ஆசிர்வாதம் என்னைப் பின்பற்றும்.***

நம் அழைப்பின் சரியான திசையில் நடக்கும்போது நாம் பணத்தை ஈர்க்கும் காந்தமாக மாறுவோம். தேவன் அவருடைய நாமத்தின் மகிமைக்காக, தம்முடைய மகத்தான செல்வங்களால் நம்முடைய எல்லா தேவைகளையும் சந்திப்பபார். பெற்றோராகவும், மகன் அல்லது மகளாகவும் எவ்வாறு செயல்பட வேண்டும் என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். நம்முடைய தேவன் வழிநடத்தும் திசையில் நடக்க வேண்டும். நம் வாழ்வில் கர்த்தர் வைத்திருக்கும் மகிழ்ச்சி, வல்லமை, அதிகாரம் நிறைந்த திசையில் நாம் செயல்படத் தொடங்கும் போது, நாம் எங்கிருந்தாலும் உயருவோம்! பொருளாசையின் ஆவி நம் தோள்களில் அமர்ந்திருக்கும் வரை, நம்மை வெளியே துரத்த முயற்சிக்கும் அதே நிறுவனத்தில் மேலாளராகவும், தலைவராகவும் கர்த்தர் நம்மை அழைத்திருக்கிறார் என்பதை நாம் அறிய மாட்டோம். நாம் அதனை ஜெயித்தவுடன் நம் வாழ்க்கையில் தேவனுடைய திட்டத்தை அறிந்து கொள்வோம். பொருளாசையின் ஆவி நிறைய எதிர்மறை சிந்தைகளைக் கொண்டு வருவதன் மூலம் நம்

கண்களையும் எதிர்காலத்தையம் மூடிப்போடுகிறது. கர்த்தர் நமக்காக வைத்திருக்கும் பெரிய விஷயங்களை நம்மால் உணரக்கூட முடியாது.

வேதாகமத்தில் யோசேப்பும், மோசேயும் இந்த ஆவியுடன் போராடுவதைக் காணலாம். இது அவர்களின் அடையாளத்தையும் அவர்களின் அழைப்பையும் குறித்த தடுமாற்றம் வந்தது. தாவீது ஒரு ராஜாவாக இருக்க வேண்டும், ஆனால் தான் இறந்துவிடுவேன் என்று நினைத்தார். டேனியல் ராஜாவின் துணைவராக இருக்க வேண்டும், ஆனால் அவர் சிங்கத்தின் குகையில் இறந்துவிடுவார் என்று நினைத்தார். யோசேப்பு ராஜாவின் நிதி அமைச்சராக இருக்க வேண்டும், ஆனால் அவர் சிறையில் இறந்துவிடுவார் என்று நினைத்தார். மொர்தெகாய், எஸ்தர் மற்றும் யூத குலத்தினர் இது தான் முடிவு என்று நினைத்தார்கள், அவர்கள் கொல்லப்படுவார்கள் என்று நினைத்தார்கள், ஆனால் ஆமான் அவர்கள் இடத்தில் தூக்கிலிடப்பட்டான்.

***அறிக்கை: (வாய் விட்டு சொல்லவும்)***

***நான் வெல்வேன். நான் ஆட்சி செய்வேன், இயேசு எனக்குள் இருப்பதால் நான் வெற்றி பெறுவேன்.***

நாம் மிக உயர்ந்த ஆவியான இயேசுவின் பிள்ளைகள் என்ற மிக எளிய உண்மையை அறிந்திருந்தால், நாம் தோற்கடிக்கப்பட மாட்டோம். ஆமென்!

உங்கள் அழைப்பை நீங்கள் அறிந்து கொள்ள வேண்டும், நீங்கள் அந்த அழைப்பில் செயல்படும்போது, இயேசு தான் தேவனுடைய உண்மையான ஆவி என்ற சத்தியத்தை நீங்கள் அறியும்போது, நீங்கள் தோற்கடிக்கப்பட மாட்டீர்கள்.

***அறிக்கை: (வாய் விட்டு சொல்லவும்)***

***நான் தோற்கடிக்கப்பட மாட்டேன்.***

உங்கள் அழைப்பை அறிந்தவுடன், பொருளாசையின் ஆவியினுடைய அதிகாரம் நம் வாழ்வில் உடைகிறது!

நாங்கள் சபிக்கப்பட்ட சூழலில் வாழ்கிறோம். நான் உங்கள் வீடு அல்லது அபார்ட்மெண்ட் அல்லது மனைவி பற்றி பேசவில்லை. இயேசு திரும்பி வந்து, உலகத்தை அழித்து, புதியதை உருவாக்கும் வரை சபிக்கப்பட்ட இந்த உலகில் நாம் வாழ்கிறோம்.

***அறிக்கை: (வாய் விட்டு சொல்லவும்)***

***நான் தோற்கடிக்கப்பட மாட்டேன். நான் சபிக்கப்பட்ட சூழலில் வாழ்கிறேன். நான் ஒரு ஆசீர்வாதம். இந்த சபிக்கப்பட்ட உலகத்தின் ஒளி நான்.***

இந்த இருண்ட சூழலில், நாங்கள் ஒளி. நான் எதுவாக இருந்தாலும், நான் எங்கிருந்தாலும், நான் என்ன செய்தாலும், நான் இந்த உலகத்தின் வெளிச்சம்.

சாபங்கள் என்பது மக்கள், நிலம், விலங்குகள் மற்றும் உடைமைகள் மீதான எதிர்மறை அறிக்கைகள். ஆசீர்வாதங்களாக நாம் நினைப்பதையெல்லாம் யாக்கோபு தனது தந்தையின் ஆசீர்வாதங்களைப் பெறுவதற்காக அதைக் கொடுத்தார். யாக்கோபின் தந்தை அவருடைய வார்த்தையால் அவரை ஆசீர்வதித்தார்.

***அறிக்கை: (வாய் விட்டு சொல்லவும்)***

***யாக்கோபு வார்த்தையால் ஆசீர்வதிக்கப்பட்டார்.***

ஒரு சாபம் அல்லது ஒரு ஆசீர்வாதம் நிறைவேற, யாராவது அதைப் பேச வேண்டும் அல்லது உச்சரிக்க வேண்டும். அது உச்சரிக்கப்படாவிட்டால் அது

சபிக்கப்பட்டதோ ஆசீர்வதிக்கப்பட்டதோ அல்ல. யாக்கோபின் வாழ்க்கையில் அதைத்தான் நாம் காண்கிறோம். நாம் ஆசீர்வாதம் என்று அழைக்கும் தனது நிலத்தையும், விலங்குகளையும், தான் வைத்திருக்கும் எல்லா உடைமைகளையும் யாக்கோபு விட்டுவிட்டார். யாக்கோபின் தந்தை அவரை அழைத்து அவர் மீது ஆசீர்வாதங்களை அறிவித்தார். யாக்கோபு எல்லாவற்றையும் தியாகம் செய்து, தந்தையின் ஆசீர்வாதத்திற்காக ஓடினார். உலகத் தரத்தின்படி, இது முட்டாள்தனமாக இருக்கலாம், ஆனால் பரலோக தரத்தின்படி, அது ஞானம்.

ஆவியில் உயிருள்ளவர்கள் ஜெபிக்கும்போது, வார்த்தைகளைப் பேசும்போது, நீங்கள் அதைப் பெற்றுக்கொள்வீர்கள். ஆனால் அது எல்லா நேரத்திலும் நடக்காது. எனவே அதை நீங்களே உங்கள்மீது பேச வேண்டும். இயேசுவின் ஆவி நம்மில் இருப்பதால், நாம் இயேசுவின் ஆவியுடன் பேசுவதால், நாம் பேசும் அனைத்தும் நிறைவேறும். நாம் தான் நம்முடைய தீர்க்கதரிசிகள்!

***அறிக்கை: (வாய் விட்டு சொல்லவும்)***

***நான் என் தீர்க்கதரிசி***

நீங்கள் பார்க்க விரும்புவதை நீங்கள் பேச வேண்டும். மாறாக, நாம் பார்ப்பதைப் பேச முனைகிறோம். நாம் பார்ப்பதைப் பேசுவதற்கும், நாம் பார்க்க விரும்புவதைப் பேசுவதற்கும் நிறைய வித்தியாசம் உள்ளது. நீங்கள் பார்க்க விரும்புவதை நீங்கள் பேச வேண்டும்.

***அறிக்கை: (வாய் விட்டு சொல்லவும்)***

***நான் பார்க்க விரும்புவதை நான் பேசுவேன்.***

விசுவாசத்தின் ஒரு அடி எடுங்கள்,
ஏனென்றால் நீங்கள் எடுத்த ஒவ்வொரு அடியும் பிசாசால் தடுக்கப்படுகிறது. அது வந்தபடியே வாழ்க. நீங்கள் அபிஷேகத்தின் கீழ் இருப்பதால், நீங்கள் வென்று வெற்றி பெறுவீர்கள்!

***அறிக்கை: (வாய் விட்டு சொல்லவும்)***

***நான் பார்க்க விரும்புவதை நான் பார்ப்பேன். நான் பார்க்க விரும்புவதை நான் பேசுவேன். நான் காண்பதைப் பேச மாட்டேன்.***

**ஆதியாகமம் 1: 1-2,**

**1 ஆதியிலே தேவன் வானங்களையும் பூமியையும் சிருஷ்டித்தார்.**

**2 பூமியானது வெறுமையும் ஒழுங்கினமையுமாய் இருந்தது, ஆழத்தின் மேற்பரப்பில் இருள் இருந்தது, தேவனுடைய ஆவியானவர் தண்ணீருக்கு மேல் அசைவாடிக்கொண்டிருந்தார்.**

இந்த உலகில் உள்ள அனைத்தும் தேவனால் படைக்கப்பட்டன, பின்னர் தேவன் ஆதாமைப் படைத்தார். தேவன் ஆதாமுக்குக் கொடுத்த முதல் கட்டளை, கீழ்ப்படுத்தி ஆட்சி செய்வது.

யாரை அடிபணியச் செய்ய தேவன் சொன்னார்? தேவன் அங்குள்ள மற்ற ஆவியை கீழ்ப்படுத்த சொன்னார். நீங்கள் மற்ற ஆவியை கீழ்ப்படுத்தாவிட்டால், நீங்கள் ஆட்சி செய்ய முடியாது. மனிதனுக்கு தேவனுடைய ஆவி இருந்தாலும், மற்ற ஆவிகளைக் கீழ்ப்படுத்த, அவன் தேவனுடைய ஆவியையும் அவனுக்கு அளிக்கப்பட்ட அதிகாரத்தையும் சரியாக பயன்படுத்த வேண்டும்.

நம் அதிகாரத்தை, மனதாலும், அணுகுமுறையாலும் நாம் வெளிப்படுத்தவில்லை என்றால், அது நமக்கு வல்லமை

இல்லை என்பது போன்றது. ஆதாமுக்கு வல்லமை இருந்தது, ஆனால் அவர் அதை தனது ஆத்மாவின் மூலம் செயல்படுத்தவில்லை. ஆதாம் நம்மில் எவரையும் விட அதிக ஜீவனுடையவராய் இருந்தார், ஏனென்றால் அவர் மகிமையால் நிரப்பப்பட்டார், அவர் ஆவியில் உயிருடன் இருந்தார். ஆதாம் தனது அதிகாரத்தை பயன்படுத்தாததால் தோல்வியடைந்தார்.

***அறிக்கை: (வாய் விட்டு சொல்லவும்)***

***அடக்கி ஆட்சி செய்யுங்கள்.***

பொருளாசையின் ஆவி நம் வாழ்க்கையில் சூழ்நிலைகளை உருவாக்கும், இதனால் நாம் யாரென்ற நம்பிக்கை இழந்துவிடுவோம். நம்முடைய அழைப்பை நாம் நம்பமாட்டோம். தனது கனவில் தவிர அவர் முதலிடம் பெறுவார் என்று யோசேப்பு கற்பனை செய்ததாக நீங்கள் எப்போதாவது நினைத்தீர்களா? நமக்கு ஒரு கனவு மட்டுமே இருக்கலாம். சூழ்நிலைகள் ஒருபோதும் நம் கனவுகளை ஆதரிக்காது. யோசேப்பு வைத்திருந்ததெல்லாம் அவருடைய கனவுதான். தாவீது வைத்திருந்ததெல்லாம் தீர்க்கதரிசியிடமிருந்து வந்த வார்த்தையும் அபிஷேகமும் தான். மொர்தெகாயிடம் இருந்ததெல்லாம் அவர் ஒரு யூதர், அவர் எந்த மனிதர்களுக்கும் முன்பாக வணங்கமாட்டார். நாம் அனைவரும் ஆவிக்குரிய யூதர்கள். மோசேயிடம் இருந்தது ஒரு வார்த்தை மட்டுமே.

அதிகாரத்தில் நடந்து செல்லும் அனைவரையும் பிசாசு தொந்தரவு செய்ய முயற்சிக்கிறது. அவர்கள் வாழ்க்கையில் கடவுளின் வேலையை குறைக்க முயற்சிக்கிறான். கர்த்தருடைய வார்த்தையினாலும் வாக்குத்தத்தினாலும் நாம் நம்மை அதிகாரப்படுத்த வேண்டும்.

***அறிக்கை: (வாய் விட்டு சொல்லவும்)***

***கர்த்தருடைய வாக்குத்தத்தினால் நாம் நம்மை அதிகாரப்படுத்த வேண்டும்.***

கர்த்தர் என்னை யாரென்றுசொல்கிறாரோ அவர் தான் நான். நான் எங்கே இருப்பேன் அன்று அவர் சொல்கிறாரோ அங்கே நான் இருப்பேன்

மாற்கு 11: 23-ல் எவனாகிலும் இந்த மலையைப் பார்த்து: நீ பெயர்ந்து, சமுத்திரத்திலே தள்ளுண்டுபோ என்று சொல்லி, தான் சொன்னபடியே நடக்கும் என்று தன் இருதயத்தில் சந்தேகப்படாமல் விசுவாசித்தால், அவன் சொன்னபடியே ஆகும் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்.

***அறிக்கை: (வாய் விட்டு சொல்லவும்)***

***இன்று நான் புத்துயிர் பெறுகிறேன்; நான் மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுகிறேன். கர்த்தர் எனக்கு அளித்த வாக்குறுதிகளை கடை பிடிப்பேன்.***

என் அழைப்பை அழிக்கமுடியாது. எதுவாக இருந்தாலும், கர்த்தர் என்னை அழைத்த அழைப்பு இயேசுவின் நாமத்தில் நிறைவேறும்.

இந்த நம்பிக்கை ஒரு நாளுக்கு அல்ல, அது ஒரு நிலையான வாழ்க்கை முறையாக இருக்க வேண்டும். நம்மில் எவரையும் விட ஆதாமுக்கு அதிக சக்தி இருந்தது. அவர் மகிமையால் நிறைந்திருந்தார். ஆனால் இன்னும் அவர் தனது அதிகாரத்தை மனதில் பயன்படுத்த முடியவில்லை, அவர் அதை மோசமாக இழந்தார். நீங்கள் விசுவாசித்து அறிக்கை செய்தால், நீங்கள் அழிக்கப்பட மாட்டீர்கள், நீங்கள் வெட்கப்பட மாட்டீர்கள். நீங்கள் இயேசுவின் நாமத்தில் எழுந்திருப்பீர்கள்.

**நீதிமொழிகள் 18:20, 21 ல் நாம் காண்கிறோம், அவனவன் வாயின் பலனால் அவனவன் வயிறு நிரம்பும்; அவனவன்**

**உதடுகளின் விளைவினால் அவனவன் திருப்தியாவான். மரணமும் ஜீவனும் நாவின் அதிகாரத்திலிருக்கும்; அதில் பிரியப்படுகிறவர்கள் அதின் கனியைப் புசிப்பார்கள்.**

"உங்கள் நாவின் கனி" என்று வசனம் கூறுகிறது. இது உங்கள் மனதின் பலனைக் கூறவில்லை. நீங்கள் பேச வேண்டும், நம்ப வேண்டும். நீங்கள் அறிக்கை செய்ய வேண்டும். நீங்கள் கடைபிடிக்க வேண்டிய ஆவிக்குரிய சட்டங்கள் உள்ளன. கடவுள் நமக்கு நாவையும் மனதையும் கொடுத்திருக்கிறார்; நாம் அதை சரியான விஷயத்திற்கு பயன்படுத்த வேண்டும்.

***அறிக்கை: (வாய் விட்டு சொல்லவும்)***

***நான் என் வாய் நாக்கு மற்றும் மனதை சரியான காரியத்திற்கு பயன்படுத்துவேன்.***

லாசருவின் கல்லறையில் இயேசு, "லாசருவே வெளியே வா" என்றார். யாரோ ஒருவர் அவர் மீது ஜீவனைப் பேசவேண்டியிருந்தது. உங்கள் வாழ்க்கையின் மேல் நீங்கள் பேச வேண்டும், நீங்கள் உங்கள் தீர்க்கதரிசி. நீங்கள் என்ன பேசுகிறீர்கள் என்பது முக்கியம்.

ஆசீர்வாதங்களும் சாபங்களும் வரும் ஆன்மீக இடைமுகமே உங்கள் வாய். உங்கள் வாய், உங்கள் நாக்கு, உங்கள் உதடுகள் உங்கள் வாழ்க்கையில் ஆசீர்வாதங்களைக் கொண்டுவர வேண்டும். சில நேரங்களில் நம்முடைய பேச்சு, எதை பார்க்கிறோம், எதை நம்புகிறோம், எல்லோரும் நம்மைப் பற்றி என்ன சொல்கிறார்கள் என்பதாயிருக்கிறது. சூழ்நிலைகள் எதிர்மறையாக இருக்கும்போது கூட, நாம் எதிர்மறையாக பேசக்கூடாது.

***அறிக்கை: (வாய் விட்டு சொல்லவும்)***

***நான் என் வாய் நாக்கு மற்றும் மனதை சரியான காரியத்திற்கு பயன்படுத்துவேன்.***

நான் வேறுவிதமாக பேச மாட்டேன். நான் என் தீர்க்கதரிசி. எனக்கு அதிகாரம் உள்ளது, நான் தெரிந்தெடுக்கப்பட்டவன், நான் வெற்றிபெறுபவன், நான் வெல்லமுடியாதவன்.

**1பேதுரு 3:10 ஜீவனை விரும்பி, நல்ல நாட்களைக் காணவேண்டுமென்றிருக்கிறவன் பொல்லாப்புக்குத் தன் நாவையும், கபடத்துக்குத் தன் உதடுகளையும் விலக்கிக்காத்து.**

சுக்கான் கப்பலின் ஒரு சிறிய பகுதி. நவீன கப்பல்களின் சுக்கான், அதன் அளவை விட ஆயிரம் மடங்கு சிறியவை. அந்த சிறிய சுக்கான் கப்பலின் போக்கை மாற்றும். உங்கள் நாக்கு இதேபோல் உங்கள் வாழ்க்கையின் போக்கை மாற்றும். நீங்கள் பேசுவது உங்களைச் சுற்றியே இருக்கும், அது உங்களுடன் தூங்குகிறது. நாக்கு ஒரு சிறிய உறுப்பு என்றாலும், அதற்கு நெருப்பு இருக்கிறது. இது முழு உடலையும் தீட்டுப்படுத்துகிறது. உங்கள் உடலை தீட்டுப்படுத்த அல்லது உங்கள் உடலை சரியாக அமைக்க உங்கள் நாக்கைப் பயன்படுத்தலாம். நீங்கள் ஒரே வாயால் ஆசீர்வாதம் அல்லது சாபத்தை கொண்டு வரலாம்.

**யாக்கோபு 3: 4 கப்பல்களையும் பாருங்கள், அவைகள் மகா பெரியவைகளாயிருந்தாலும், கடுங்காற்றுகளால் அடிபட்டாலும், அவைகளை நடத்துகிறவன் போகும்படி யோசிக்கும் இடம் எதுவோ அவ்விடத்திற்கு நேராக மிகவும் சிறிதான சுக்கானாலே திருப்பப்படும்.**

நீங்கள் நல்ல நாட்களையும் நல்ல வாழ்க்கையையும் பெற விரும்பினால் தீமையைப் பேசுவதைத் தவிர்க்கவும். எதிர்மறையாக பேசுவதில் இருந்து விலகி இருங்கள். நாம் மற்றவர்களைப் பற்றி பேசக்கூடாது, ஆனால் நம்மைப் பற்றி பேச முனைகிறோம். இது உங்களில் பணிபுரியும்

பொருளாசையின் ஆவி. அறியாமை காரணமாக நீங்கள் உங்கள் மீது ஏமாற்றத்தைப் பேசுகிறீர்கள். தன் நாக்கையும் வாயையும் காத்துக்கொள்பவன் தன் ஆத்துமாவை சிக்கலில் இருந்து தப்புவித்துக்கொள்ளுவான். வேதம் கூறுகிறது, "அறிவு இல்லாததால் என் மக்கள் அழிந்து போகிறார்கள்". இந்த சூழலில், நம் வாயையும் நாக்கையும் எவ்வாறு பயன்படுத்துவது என்று தெரியாததால் நாம் அழிந்து போகிறோம்.

**ஓசியா 4: 6 என் ஜனங்கள் அறிவில்லாமையினால் சங்காரமாகிறார்கள்.**

நம் நாக்கை எவ்வாறு பயன்படுத்துவது என்று தெரிந்தால், நாம் பிழைப்போம், இல்லையென்றால் நாம் அழிந்து போவோம். இது ஒரு ஆவிக்குரிய சட்டம். நீங்கள் தனிமையாக இருக்கிறீர்கள் அல்லது உடைந்துவிட்டீர்கள் என்று சொல்லும்போது, உங்களை நீங்களே சபிக்கிறீர்கள். இந்த முக்கோணத்தில் கடவுளுக்கு எந்த சம்பந்தமும் இல்லை; அது நீங்கள், உங்கள் சொல் மற்றும் சாபம். எழுந்து உங்கள் அதிகாரத்தை எடுத்துக் கொள்ளுங்கள். பொருளாசையின் ஆவியை உங்களிலிருந்து உதறிவிடுங்கள். அது உங்கள் தோள்களில் அமர முடியாது.

மனிதனுக்கு உள்ளே செல்வது அவனைத் தீட்டுப்படுத்தாது, ஆனால் வெளியே வருவது ஒரு மனிதனைத் தீட்டுப்படுத்துகிறது. நீங்கள் எதிர்மறையான மற்றும் தேவையற்ற எல்லா விஷயங்களையும் பேசினால், அதை நீங்களே தீர்க்கதரிசனம் கூறுகிறீர்கள். நீங்கள் உங்கள் வாழ்க்கையில் மரணத்தைப் பேசுகிறீர்கள்.

**பொருளாசையின் ஆவியை உடைக்க மற்றொரு யுக்தி உங்கள் தியாகம்!**

உங்கள் பலியை பலிபீடத்திற்கு எடுத்துச் செல்லும்போது, உங்கள் பலியின் மீது பேசுகிறீர்கள். உங்கள் தசமபாகங்களை எடுத்து, பலிபீடத்தின் மீது வைத்து பேசும்போது, உங்களுக்குப் பதிலாக உங்கள் தியாகம் மரிக்கிறது. இப்படி செய்வது வாழ்க்கை, செழிப்பு மற்றும் அமைதியைக் கொண்டுவரும். நாம் கர்த்தருக்கு மிகச் சிறந்ததை எடுத்து, அதை நம்முடைய பலிபீடத்திலோ அல்லது ஜெப இடத்திலோ வைத்து, ஆரோக்கியத்தைப் பெற அதைப் பற்றி பேச வேண்டும். நீங்கள் சரியாக பேசத் தொடங்கும் முதல் இடம் அதுதான். தியாகம் இல்லாமல் ஆன்மீகத்தில் நீங்கள் செய்யும் எதையும் முத்திரை வைக்கமுடியாது. இந்த சபிக்கப்பட்ட சூழலில் இருந்து வெளிவரும் எதையும் பற்றி நாம் ஜீவனை பேச வேண்டும்.

உங்கள் தியாகத்தின் மேல் நீங்கள் பேசின பிறகு, உங்கள் வாழ்க்கையில் வரும் உலகப்பொருளின் மேல் ஜீவனை உருவாக்குகிறீர்கள், அது உங்களுக்கு நன்மையாக அமையும். பொருளாசையின் ஆவிக்கு நீங்கள் இதைக் கடக்கிறீர்கள். அந்த இடத்தில் பொருளாசையின் ஆவி உடைகிறது.

***அறிக்கை: (வாய் விட்டு சொல்லவும்)***

***நான் என் தியாகத்தால் பொருளாசையின் ஆவியை உடைப்பேன்.***

**II கொரிந்தியர் 9: 7 அவனவன் விசனமாயுமல்ல, கட்டாயமாயுமல்ல, தன் மனதில் நியமித்தபடியே கொடுக்கக்கடவன்; உற்சாகமாய்க் கொடுக்கிறவனிடத்தில் தேவன் பிரியமாயிருக்கிறார்.**

நீங்கள் கர்த்தருக்குக் கொடுப்பதைப் பற்றி மகிழ்ச்சியாக இருக்க வேண்டும். அதை கட்டாயத்தால் செய்யக்கூடாது. நீங்கள் கொடுத்தால் நீங்கள் ஆசீர்வதிக்கப்படுவீர்கள்.

டாக்டராக இருந்த என் மாமா இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு காலமானார். அவருக்கு நான்கு லட்சம் கடன் இருந்தது. அவர் சிலருக்கு கொஞ்சம் பணம் தரவேண்டியது எனக்குத் தெரியவந்தது. என்னிடம் பணம் இருப்பதாக அவர்களுக்குத் தெரியாது. அவர்களுடைய ஒப்பந்தங்களில் எனக்கு சம்பந்தமில்லை , ஆனால் நான் அவருடைய கடன்களை செலுத்தினேன். என் அத்தை தனது கணக்கில் ஐம்பதாயிரம் வைத்திருந்தார், அதைவைத்து தேவாலயத்திற்கு சில பொருட்கள் வாங்கினோம். ஆனால் பின்னர் ஒரு துண்டு காகிதத்தைக் கண்டுபிடித்தேன், அந்த ஐம்பதாயிரம் யாருக்கு சொந்தமானது என்று அதில் எழுதியிருந்தது. இது பதிவு செய்யப்படவில்லை, அது ஒரு காகிதத்துண்டில் எழுதப்பட்டிருந்தது.

என் மாமாவும் அத்தையும் ஒரு பெண்ணைத் தத்தெடுத்து, அவளுடைய படிப்புக்கு ஆதரவளித்து வந்தனர். அந்த ஐம்பதாயிரம் ரூபாயை அவளுக்குக் கொடுக்க வேண்டும் என்பதே அவர்களின் விருப்பமாக இருந்தது. அந்தப்பெண் ஒரு மருத்துவ செவிலியர், நன்றாக இருக்கிறாள். பெங்களூரில் இருந்த அவளை, நான் கண்டுபிடிக்க முயற்சித்தேன். ஆனால் அவள் எங்கோ இடம்பெயர்ந்திருந்தாள். சில நாட்களுக்குப் பிறகு அவள் புதுதில்லியில் இருப்பதாக நான் அறிந்து, அவளைத் தொடர்புகொண்டு அந்த ஐம்பதாயிரத்தை அவளிடம் அனுப்பினேன்.

நான் சுத்தமான கைகளோடு தேவனுடைய முன்னிலையில் நிற்கிறேன். நான் அதைப் பற்றி தைரியமாக பேச முடியும். கர்த்தர் எனக்கு உண்மையுள்ளவர், விசுவாசமுள்ளவர். நான் செய்தது என்ன என்று எனக்குத் தெரியும் என்பதால் நான் அதிகாரத்துடன் பேசுகிறேன். இது ஒரு ஆவிக்குரிய சட்டம்.

உங்கள் வாழ்க்கையில் பொருளாசையின் ஆவியை உடைக்க, கர்த்தர் உங்கள் அறிவுக்கண்களையும் ஞானக்கண்களையும் திறக்கும்படி உங்களுக்காக நான் ஜெபிக்கிறேன். ஆமென்.

## சகோதரி ஜோனா



எனது பெயர் ஜோனா, எனக்கு சுமார் 14 வருட ஐ.டி பணி அனுபவம் உள்ளது மற்றும் ஒரு சிறந்த எம்.என்.சி.யில் ஆரம்பத்திலிருந்தே, நான் எப்போதும் வேலை பளு அதிகம் உள்ள ப்ராஜெக்ட்களுக்கு நியமிக்கப்பட்டேன், இதனால் தனிப்பட்ட வாழ்க்கை பாதிக்கப்பட்டது. நான் திருமணமான பிறகும் இது தொடர்ந்தது. எனக்கு இப்போது 9 வயது ஒரு மகன் இருக்கிறார்.

கடவுள் என்னை ஆசீர்வதித்த ஏராளமான சம்பவங்கள் இருந்தாலும், ஒரு சம்பவத்தை எனது சாட்சியாக பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன்.

ஜூன் 2017 இல், நான் ஒரு ஆஸ்திரேலிய தொலைத் தொடர்பு நிறுவனத்தின் ப்ரொஜெக்ட்டில் பணிபுரிய நியமிக்கப்பட்டேன்

அங்கு இருந்த எல்லா ப்ரொஜெக்ட்களிலும் இது மிகுந்த வேலை பளு நிறைந்த ப்ராஜெக்ட் என்று பின்பு தான் தெரிந்தது. இருப்பினும், வேறு எந்த ப்ரொஜெக்ட்டும் கிடைக்காததால், நான் அதைப் பற்றி ஜெபித்து, “ஆண்டவரே இது எனக்குரியது இல்லையென்றால் அதை நீக்கி விடும் ” என்றேன். நான் கையாள கடினமாக இருந்தால், அவர் என்னை 2 மாதங்களில் விடுவிப்பார் என்று எனது உடனடி மேலாளர் எனக்கு உறுதியளித்தார். நான் அவரை நம்பும் அளவுக்கு அப்பாவியாக இருந்தேன், ஆனால் அந்த நேரத்தில் நான் அறியாதது என்னவென்றால் அந்த ப்ரொஜெக்ட்டில் இருந்து வெளியேறுவது சாத்தியமில்லை.

ப்ரொஜெக்ட்டில் இணைத்து பணிபுரிய தொடங்கினேன் ஓரிரு வெளியீடுகளுக்காக எனக்கு வழங்கப்பட்ட பாதையை நிர்வகித்து, என்னால் முடிந்ததைச் செய்ய முயற்சித்தேன்.

எப்போதுமே நான் அதிகத் கண்காணிப்பு கொண்ட மிகவும் நேரமெடுக்கின்ற வெளியீடுகளில் வைக்கப்பட்டேன். அவர்கள் அலுவலகத்திற்கு வரும்போது அவர்கள் எடுக்க வேண்டிய விஷயங்கள் அணியிடம் இருப்பதை உறுதிசெய்ய, நான் அதிகாலை 4 மணிக்கு எழுந்து அன்றைய தினம் பகுப்பாய்வு செய்து திட்டமிட்டேன், என் நாள் இறுதியாக இரவு 10-11 மணிக்கு முடிவடையும், இருப்பினும் பல சிக்கல்கள் வந்து கொண்டுதான் இருக்கும், நான் ஒவ்வொரு பக்கத்திலும் மேலாளர்களால் பந்தாடப்பட்டேன். எனக்கு காலை 8:30 மணி முதல் மதியம் 1:30 மணி வரை திரும்ப திரும்ப தொலைபேசி அழைப்புகள் இருக்கும். என் கண்கள் வறண்டு போகும், மதியம் 1 மணியளவில் எனக்கு காய்ச்சல் வர ஆரம்பிக்கும். காலை உணவு, மதிய உணவு மற்றும் இரவு உணவு இல்லை, அதேபோல் என் குடும்பத்தினரும் செல்ல வேண்டியிருந்தது. என் கணவர் என்னை மிகவும் ஆதரித்தார், வீட்டிலேயே பெரும்பாலான வேலைகளைச் செய்தார். என் மகன் என்னிடம் உணவு கேட்டுக்கொண்டே இருப்பான், அவனுக்கு எதுவும் கொடுக்க எனக்கு நேரம் இருக்காது. நான் நீண்ட நேரம் என் மேஜையில் உட்கார்ந்திருப்பேன், நான் எடை போட ஆரம்பித்தேன். எனது நிலைமை மோசமடைந்தது.

நான் இறுதியாக எனது மேலாளரை நவம்பர் மாதம் 22 ஆம் தேதி விடுவிக்கும்படி கேட்டேன். ஆரம்பத்தில் நாங்கள் ஒப்புக்கொண்ட எனது 2 மாத கால அவகாசத்தை கடந்தேன். நாங்கள் விவாதித்தோம், ஜனவரி 6 ஆம் தேதிக்குள் என்னை விடுவிக்குமாறு கேட்டேன், அடுத்த 6 மாதங்களுக்கு என் அம்மா என்னுடன் தங்க வருவார், அவர்கள் மிகவும் வயதாகிவிட்டார்கள், நான் அவர்களை பராமரிக்க வேண்டும், நான் நிச்சயமாக அவசர நிலை ப்ரொஜெக்ட்டுகளில் தொடர்ந்து வேலை செய்ய முடியாது

என்றேன். அவர் அதை பிறகு பார்ப்போம் என்று விட்டுவிட்டார்.

பின்னர் ஏதோ மாற்றம் ஏற்பட்டது. ஆனால் பாஸ்டர் சொல்வது போல் யுத்தம் வெகு தொலைவில் உள்ளது!! அடுத்த மாதமே எனது மேலாளர் மாறினார். ஏதேனும் முக்கியமாக இருந்தால் உள்நுழைந்து சரிபார்க்கச் சொல்ல அதிகாலை 1 மணிக்கு என்னை அழைப்பார். எனது TL அறிவிக்காமல் மூன்று வாரங்களுக்கு தொலைபேசி அல்லது அஞ்சல் மூலமும் முடியாதவாறு சென்று விட்டாள். நான் ஒரு தொழில்நுட்ப பின்னணியைச் சேர்ந்ததால், அதையும் நான் எடுத்துக் கொள்ள வேண்டியிருந்தது. ஒருமுறை நான் 3 நாட்கள் இரவும் பகலும் வேலை செய்தேன்.

ஜனவரி மாதத்தில், எனது முந்தைய மேலாளருடன் எனது மதிப்பீட்டு கலந்துரையாடலின் போது, ப்ரொஜெக்ட்டில் இருந்து விடுவிக்குமாறு கேட்டேன், பிப்ரவரி இறுதி வரை அல்லது மார்ச் நடுப்பகுதி வரை அவர் என்னை விடுவிக்க முடியாது என்று அவர் என்னிடம் கூறினார். நான் முற்றிலும் சோர்வடைந்தேன், மேலும் என்னால் தொடர முடியாது என்று எனக்குத் தெரியும். நான் அதைப் பற்றி ஜெபித்தேன், அதை கடவுளிடம் விட்டுவிட்டு, தொடர்ந்து பிஸியான கால அட்டவணையைப் பின் பற்றினேன்.

சரியாக ஜனவரி 21 அன்று, நவம்பர் 22 இருந்து இரண்டு மாதங்கள் கழித்து, மற்றொரு டீமை சேர்ந்த எனது நண்பர், என்னை வாழ்த்தி ஒரு செய்தியை அனுப்பினார். நான் உடனடியாக அவளை அழைத்தேன், நான் 3 நாட்களில் விடுவிக்க பட போகிறேன் என்று என் மேலாளரிடமிருந்து ஒரு மெயில் வந்ததாக அவள் என்னிடம் சொன்னாள். நான் மகிழ்ச்சியில் திக்குமுக்காடினேன். தேவனுக்கு நன்றி. ஜனவரி 25 என்னை விடுவிப்பது என முடிவு செய்யப்பட்டாலும், அது ஜனவரி 31 வரை நீட்டிக்கப்பட்டது.

எனது மேலாளர், நான் விடுவிக்கப்பட்ட நாளில், “உங்களுடன் பணியாற்றியது நல்லது, நீங்கள் தொடர முடிந்தால் நன்றாக இருந்திருக்கும்”. பின்னர் அவர் மேலும் கூறினார், "இந்த விடுப்பு உயர்ந்த ஒருவரிடமிருந்து வந்தது என்று கேள்விப்பட்டேன், உங்களைத் தக்கவைக்க எங்களால் எதுவும் செய்ய முடியவில்லை". நான் "ஆம், நான் மிகவும் உயர்ந்த ஒருவரிடம் பேசினேன்" என்று சேர்த்துக் கொண்டேன், என் இதயத்தில் நினைத்தேன், "வேறு எந்த பெயரையும் விட உயர்ந்தது !!"

நான் அதைப் பற்றி சிந்திக்கையில், கடவுள் எனக்கு ஆதரவாக ஒரு அற்புதத்தை எவ்வாறு செய்தார் என்பதையும், ஜனவரி மாத இறுதியில் விடுவிக்க வேண்டும் என்ற எனது கோரிக்கையையும் நினைத்து நான் வியப்படைகிறேன். இது ஒரு கனவாக இருந்தபோது, நிறைய பாடங்களைக் கற்றுக்கொள்ள இந்த திட்டம் எனக்கு உண்மையில் தேவை என்று நான் நம்புகிறேன், மேலும் கடவுள் எனக்கு ஒரு திட்டத்தை வைத்திருந்தார், என்னை தயார்படுத்தினார், சரியான நேரத்தில் எனது விடுதலையும் திட்டமிட்டார். தேவன் ஆச்சரியமானவர், மரியாள் தன் இதயத்தில் சிந்தித்துப் பார்த்தது போல, கடவுள் நம் வாழ்வில் செய்த எல்லா விஷயங்களையும் நாம் சிந்திக்க வேண்டும்.

இதற்குப் பிறகு நிறைய பேர் என்னிடம் கேட்டார்கள், “ஜோனா, நீங்கள் என்ன செய்தீர்கள், எங்களிடம் கூறுங்கள், நாங்களும் இந்த ப்ரொஜெக்ட்ல இருந்து வெளியேற முயற்சி செய்கிறோம்”. நான் அவர்களிடம் “நான் ஜெபம் செய்தேன்” என்றேன். அவர்கள் என்னை குழப்பமாக பார்த்தார்கள், ஒருவர் மட்டும் தானும் ஜெபிக்க போவதாக கூறினார்!!!

நான் இப்போது சீரான திட்டமிட்ட ஒரு ப்ரொஜெக்ட்டில் இருக்கிறேன்!! எனது வேலையையும் வீட்டையும் அழகாக நிர்வகிக்க முடிகிறது.

பாஸ்டர் எப்போதும் சொல்வது போல், காரிருள் வேளையில் இறைவன் நமக்கு ஆதரவாக செயல்படுகிறார். இது உண்மை. !! என் பரலோகத் தகப்பனுக்கும் போதகரின் ஊக்கமளிக்கும் வார்த்தைகளுக்கும் எல்லா மகிமையும் மரியாதையும் புகழும் கொடுக்க விரும்புகிறேன்!

எதிர்காலம் என்னவென்று எனக்குத் தெரியாது, ஆனால் அதை வைத்திருப்பவரை நான் அறிவேன், நான் அவரை முழுமையாக நம்புகிறேன்!!!

## சகோதரி கலை சுரேஷ்



எனது பெயர் கலை, எனது கணவர் சுரேஷ். நாங்கள் 2016 முதல் ELAG சபையில் கலந்து கொள்ளத் தொடங்கினோம். நாங்கள் இந்த தேவாலயத்திற்கு வந்ததிலிருந்து நாங்கள் ஆவிக்குரிய ரீதியில் வளர்ந்து வருகிறோம். இரவு ஜெபத்தின் போது நாங்கள் இருவரும் பரிசுத்த ஆவியைப் பெற்றோம், அதன் பிறகு எங்கள் வாழ்க்கையில் விஷயங்கள் மாறத் தொடங்கின. முதன்மையான விஷயம் என்னவென்றால், வெற்றிகரமான கிறிஸ்தவ வாழ்க்கையை வாழ்ந்த அனுபவம் உண்டானது. இதை வலியுறுத்த, இரவு பிரார்த்தனையின் ஒரு பகுதியாக இருந்தபின், சில நிகழ்வுகளைப் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன். பரிசுத்த ஆவியைப் பெற்ற சுமார் ஒரு வாரத்திற்குப் பிறகு, என் வீட்டில் ஒருவித இருளை உணர ஆரம்பித்தேன். இது குறித்து நான் பாஸ்டரிடம் பேசினேன், அவர் என்னிடம் “கடவுள் உங்களுக்கு ஏதாவது காட்டுகிறார் என்றால், அதை வெளியேற்றுவதற்கான பலத்தையும் அவர் உங்களுக்குக் கொடுப்பார்’ ’என்று கூறினார். எனவே, நான் அந்நியபாஷைகளில் ஜெபிக்க ஆரம்பித்தேன், அதைக் கண்டித்தேன், ஆனால் அது தோல்வியுற்றது. அந்த வாரம், இரவு ஜெபத்தில், பாஸ்டர் எபேசியர் 1: 18-22 அன்று பேசினார். நான் வசனத்தை நானே தனிப்பயனாக்கினேன், "கிறிஸ்துவை மரித்தோரிலிருந்து எழுப்பி, தந்தையின் வலது கையில் அமர்ந்தபோது கடவுள் செலுத்திய அதே வல்லமை என்னுள் இருக்கிறது, கடவுள் எல்லாவற்றையும் அவருடைய காலடியில் வைத்தார்; நான் தந்தையின் வலது புறத்தில் இயேசுவோடு அமர்ந்திருக்கிறேன், பிசாசு என் காலடியில் உள்ளது”. அதே நாளில், என் வீட்டில் விடுதலையை உணர்ந்தேன். ஒரு நல்ல ஆவிக்குரிய

தகப்பனின் வேலை என்னவென்றால், தம் மக்களை சுதந்திரமாக நிற்கவும், அவர்களின் எதிரிகளை எதிர்கொள்ளவும் பயிற்சியளிப்பது, விவிலிய சத்தியங்களையும், கடவுள் கொடுத்த வெளிப்பாடுகளையும் தைரியமாக பேசுவது, யாரையும் புண்படுத்தாதது மற்றும் அவருடைய மக்கள் மீது இரக்கமுள்ள இருதயம் வைத்திருப்பது. இந்த குணங்களை நான் எங்கள் போதகர் இடத்தில் பல சந்தர்ப்பங்களில் கவனித்தேன். எனவே, நாங்கள் நல்ல தலைமையின் கீழ் இருக்கிறோம் என்று மகிழ்ச்சியுடன் மற்றும் நம்பிக்கையுடன் சொல்ல முடியும், இது இரவு பிரார்த்தனைகளில் தவறாமல் கலந்துகொள்ள என்னைத் தூண்டியது. மூன்று ஆண்டுகளுக்கு முன்பு நாங்கள் ஐரோப்பாவிலிருந்து திரும்பி வந்தபோது, எனது ஒரே ஜெபம், “ஆண்டவரே எங்களை வளரக்கூடிய ஒரு ஆலயத்திற்கு அழைத்துச் செல்லுங்கள், அங்கு நாங்கள் உங்களில் வளர்ந்து இறுதியில் உங்களைப் போலவே மாறி விடுவோம்” , கடவுள் என் ஜெபங்களுக்கு பதிலளித்ததாக நான் நினைக்கிறேன்.

எங்களுக்கு திருமணமாகி 7 ஆண்டுகள் ஆகின்றன, எங்களுக்கு குழந்தை இல்லை. ஹார்மோன் சிகிச்சைகள் மற்றும் நான் எடுத்த மருந்துகள் உட்பட பல சிகிச்சைகள் முயற்சித்தேன், இது என் வாழ்க்கையை மோசமாக மாற்றியது. என் பெற்றோர் மிகவும் அக்கறை கொண்டிருந்தார்கள், அவர்கள் என்னை ஐவிஎஃப் மையங்களுக்கு அழைத்துச் சென்றார்கள். நான் மருத்துவமனையில் இருந்த ஒவ்வொரு முறையும், நான் மிகவும் அமைதியற்றவனாக உணர்ந்தேன், ஒரு கிறிஸ்தவனாக இருப்பதால் நான் என் நம்பிக்கைக்கு எதிராக ஏதாவது செய்கிறேன் என்று உணர்ந்தேன். எனது

நிலைமை குறித்து என் கடவுள் எதுவும் செய்ய இயலாது என்று நான் அறிவிக்கிறேன் என்று உணர்ந்தேன், அதனால் நான் மருத்துவர்களிடம் ஓடுகிறேன். வாழ்க்கையின் யதார்த்தத்திற்கும் விசுவாசத்திற்கும் இடையில் நான் போராடிக் கொண்டிருந்தேன். இவை அனைத்தினூடாக, போதகர் அவருடைய மனைவியும் எனக்கு ஒரு தூணாக நின்று பிரார்த்தனை செய்து என்னை விசுவாசிக்க ஊக்குவித்தனர். ஒரு கட்டத்தில், நான் மருத்துவர்களிடம் ஓடுவதை நிறுத்தவும், ஒவ்வொரு சிகிச்சையையும் நிறுத்தவும் முடிவு செய்தேன், மேலும் தேவனுக்காக காத்திருக்க முடிவு செய்தேன். இரவு பிரார்த்தனைகளில் கலந்துகொள்வதன் மூலம் நான் நம்பிக்கையையும் பலத்தையும் பெற்றேன், போதகரின் ஒவ்வொரு செய்தியும் என் நம்பிக்கையை பலப்படுத்தியது. நான் வணங்கும் என் கடவுள் எனக்கு ஒரு குழந்தையைத் தருவார் என்று தைரியமாக என் பெற்றோரிடம் சொன்னேன், மற்ற எல்லா சிகிச்சையையும் நிறுத்தினேன். ஒருமுறை நான் என் சொந்த பலத்தில் ஓடுவதை நிறுத்திவிட்டேன், கடவுள் என்னில் வேலை செய்யத் தொடங்கினார். ஒவ்வொரு நாளும் குறைந்தது ஒரு மணி நேரமாவது நான் அந்நியபாஷைகளில் ஜெபிக்க ஆரம்பித்தேன். நான் புதிய ஆவிக்குரிய வலிமையைப் பெற்றேன், என் வாழ்க்கையில் விஷயங்கள் மாறத் தொடங்கின. டிசம்பர் 2018 இல் எந்தவொரு மருத்துவ தலையீடும் இல்லாமல் நான் இயற்கையாகவே கருத்தரித்தேன். பாஸ்டர் சொல்வது போல, டாக்டர்கள் தங்களால் இயன்றதைச் செய்யட்டும், கடவுள் என்ன செய்ய முடியும் என்பதைச் செய்யட்டும். டாக்டர்களுக்கு உண்மையில் வரம்புகள் உள்ளன, ஆனால் என் ஆவியானவர் எல்லா ஆவிகளுக்கும் ஆண்டவர் “இயேசு கிறிஸ்து” ஒரு அதிசய வேலை செய்யும் கடவுள். என் அனுபவத்தின் மூலம், கடவுளால் சாத்தியமற்றது எதுவுமில்லை என்று மட்டுமே என்னால் கூற முடிந்தது, என்

சொந்த பலத்தில் ஓடுவதையும் என் தர்க்கரீதியான புரிதலுக்கு ஏற்ப காரியங்களைச் செய்வதையும் நான் கற்றுக்கொண்டேன். முக்கியமானது, இறைவன் ஒவ்வொரு எதிர்மறையான சிந்தனையையும் பயத்தையும் மூடிவிட்டு, இறைவனின் வாக்குறுதிகளில் கவனம் செலுத்துவதாகும். ஒவ்வொரு முறையும் நான் அந்நியபாஷைகளில் ஜெபிக்கும்போது, மற்ற எல்லா அதிகாரங்களையும் கண்டிப்பதற்கும், என் வாழ்க்கையில் செயல்படுவதற்கும் ஒரு புதிய ஆன்மீக வலிமையை உணர்ந்தேன். ஆவிக்குரியரீதியில் நான் வலுவடைந்தவுடன், கடவுள் கொடுத்த விதியைத் தடுக்கும் விஷயங்கள் திறக்கத் தொடங்கின என்று நான் உறுதியாக நம்புகிறேன். ஐவிஎஃப் அல்லது பிற மருத்துவ முறைகள் மூலம் நான் ஒரு குழந்தையைப் பெற்றிருக்க முடியும், ஆனால் கடவுளிடமிருந்து முற்றிலும் பெறுவதில் மகிழ்ச்சியும் மகிழ்ச்சியும் எங்கும் ஒப்பிடமுடியாது. இப்போது நாங்கள் இருவரும் எனது குடும்ப உறுப்பினர்கள் மற்றும் இந்துக்களான உறவினர்கள் முன் ஒரு சாட்சியாக நிற்கிறோம். உண்மையான வாழும் ஒரு கடவுளை நாங்கள் சேவிக்கிறோம் என்று இப்போது தைரியமாக சொல்கிறோம். எங்களை சத்தியத்தில் வழிநடத்தியதற்கும் ஆவிக்குரிய யதார்த்தத்திற்கு கண்களைத் திறந்ததற்கும் பாஸ்டர்க்கு நன்றி சொல்ல வார்த்தைகள் இல்லை.

எனது அலுவலகத்திலும் சில சாட்சியங்களை பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன், நான் ஒரு ஆராய்ச்சி நிறுவனத்தில் விஞ்ஞானியாக வேலை செய்கிறேன். எனது சொந்த ஆய்வகத்தை நிறுவ, நான் மானியங்களை விண்ணப்பிக்க வேண்டியிருந்தது. நான் அரசாங்கத்திற்கு இரண்டு மானியங்களை விண்ணப்பித்தேன், இரண்டு

மானியங்களும் அனுமதிக்கப்பட்டன, மேலும் 40 லட்சம் மானியத்துடன் எனது சொந்த ஆய்வகத்தை நிறுவியுள்ளேன். இந்தியா முழுவதும், 100 மகளிர் விஞ்ஞானிகளுக்கு மட்டுமே இந்த மானியம் வழங்கப்பட்டது மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட 99 பேரில் சி.எஸ்.ஐ.ஆர் நிறுவனங்களிலிருந்து (மத்திய அரசு) மற்றும் சி.எஸ்.ஐ.ஆர் அல்லாத நிறுவனத்தில் பணிபுரியும் மானியம் நான் மட்டுமே பெற்றேன். இது முற்றிலும் தேவன் மட்டுமே என்று எனக்குத் தெரியும். நான் இயேசுவுக்கு எல்லா மகிமையையும் தருகிறேன், ஏனென்றால் அவர் தம் மக்களை "வாலாக்காமல் தலையாக்குகிறார்'. சமீபத்தில் ஜூலை 2019 இல், என் ஆய்வுக் கட்டுரை இன்டர்நேஷனல் ஜர்னல் ஆஃப் நானோமெடிசினில் அதிக தாக்கக் காரணியுடன் வெளியிடப்பட்டது, இது எனக்கு நிறுவனத்தில் நிறைய அங்கீகாரத்தைப் பெற்றது. "என் அபிஷேகம் செய்யப்பட்டவர்களைத் தொடாதே" என்று எழுதப்பட்டிருப்பதால், என் பணியிடத்தில் கடவுளின் தயவை நான் கண்டிருக்கிறேன். தேவையற்ற முறையில் என்னுடன் குழப்பம் செய்யும் முயன்ற மக்களின் வீழ்ச்சியை நான் கண்டிருக்கிறேன். ஆசிரியர்களில் ஒருவர் கூட நிறுவனத்தை விட்டு வெளியேறினார். இறைவன் மீதான என் நம்பிக்கை மிகவும் வளர்ந்துள்ளது, யாராவது என்னுடன் முரண்பட முயன்றால், நான் கிளர்ச்சியடைவதைக் கூட உணரவில்லை, அதற்கு பதிலாக நான் உள்ளே இருந்து சிரிக்கிறேன், "வாருங்கள், அடுத்து வாருங்கள் உங்கள் முறை" என்று சொல்வது போல் உணர்கிறேன். நான் கற்றுக்கொண்டது, ஏனென்றால் நான் அமைதியாக இருந்தால், என் கடவுள் என்னைக் காக்கப் போகிறார். இது கடவுளின் மற்ற பகுதிகளுக்குள் நுழைவது, நம்பிக்கையுடன் இருப்பது, ஒன்றும் செய்யாமல், எங்கள் விரோதிகள் விழுவதைப் பார்ப்பது என்று அழைக்கப்படுகிறது என்று

நினைக்கிறேன். முன்னதாக என்னிடம் இந்த நம்பிக்கையும் அமைதியும் இல்லை, நான் கவலைப்பட்டு என் சொந்த பலத்தில் என் போர்களை எதிர்த்துப் போராட முயற்சித்தேன். நம்முடைய வாழ்க்கையின் ஒவ்வொரு பகுதியிலும் கடவுளால் மட்டுமே உண்மையான அமைதியையும் ஓய்வையும் கொடுக்க முடியும் என்று நான் நினைக்கிறேன், நாம் அமைதியாக இருக்க முடிந்தால் மட்டுமே, எங்கள் போர்களில் சண்டையிடுவதை நிறுத்தி, கடவுளை செயலில் பார்க்கவும். எங்கள் ஆலயத்தில் இரவு பிரார்த்தனைகளிலிருந்து நான் இந்த வெளிப்பாடுகளைப் பெற்றேன், நான் கற்றுக்கொண்டவற்றில் செயல்பட ஆரம்பித்தேன்.

என் கணவருடன் அவரது அலுவலகத்திலும் இதே போன்ற விஷயங்கள் நடந்தன. அவர் தற்போது இங்கிலாந்து சார்ந்த ஒரு நிறுவனத்தில் பணிபுரிகிறார்; அவர் 2 ஆண்டுகளுக்கு முன்பு மெர்சிடிஸ் பென்ஸுக்கு விண்ணப்பித்துள்ளார். சமீபத்தில் அவருக்கு மெர்சிடிஸ் பென்ஸிடமிருந்து ஒரு அழைப்பு வந்தது, அவர்கள் இணையதளத்திலிருந்து அவரது சி.வி.யை எடுத்துக் கொண்டனர், மேலும் அவர்கள் அவருக்கு முதன்மை பொறியாளர் பதவியை (மேலாளருக்கு அடுத்ததாக) வழங்கினர், இது அவருடைய தற்போதைய நிலையை விட இரண்டு மடங்கு அதிகம். இப்போது அவரது தற்போதைய நிறுவனம் அவர் வெளியேற விரும்பவில்லை என்பதால், அவர்கள் அவருக்கு சாத்தியமான அனைத்து சலுகைகளையும், உயர்வுகளையும், இங்கிலாந்திற்கு முழுமையாக இடம்பெயர்வதற்கான ஆன்சைட் வாய்ப்பையும் வழங்கினர். நாங்கள் இடமாற்றம் செய்ய ஆர்வம் காட்டாததால், நாங்கள் சலுகையை மறுத்து, பென்ஸிடமிருந்து சலுகையை ஏற்றுக்கொண்டோம். இந்த

வாய்ப்புகளில் எதையும் நாங்கள் ஒருபோதும் தேடவில்லை என்றாலும், அது எங்கள் கதவைத் தட்டியது, அது முற்றிலும் கடவுள் என்று நமக்குத் தெரியும் - "விடாமுயற்சியுடன் ஒரு மனிதன் ராஜாக்களுக்கு முன்பாக நிற்க வேண்டும், சாதாரண மனிதனுக்கு முன்பாக அல்ல". போதகர் அவரைப் பற்றி ஜெபித்தபின் என் கணவரின் உயர் இரத்த அழுத்தம் (பிபி) சாதாரணமாகி வருகிறது. இயேசுவின் கருணை மற்றும் கருணைக்காக நாங்கள் அவருக்கு நன்றி கூறுகிறோம். ELAG ஆலயத்தை கண்டுபிடித்து அதன் ஒரு பகுதியாக இருப்பது நம் வாழ்வின் மிகப்பெரிய திருப்புமுனையாகும். நம்முடைய தனிப்பட்ட வாழ்க்கையிலும் ஊழியத்திலும் கடவுள் நமக்கு அதிக தரிசனங்களையும் வாக்குறுதிகளையும் அளித்துள்ளார். ஆகவே, நாம் கர்த்தரிடத்தில் வளர்ந்து கொண்டே இருப்பதால் இன்னும் பல சாட்சிகள் வர உள்ளன.

கடவுள் ஆசிர்வதிக்கட்டும்,

சுரேஷ் & கலை.

We are now in Facebook, Instagram, Twitter, Youtube

Kindly follow us.

**https://www.youtube.com/eternallightAGchurch**

**https://www.instagram.com/elagchurch**

**https://www.twitter.com/ELAGchurch**

**https://www.facebook.com/ELAGChurch/**

We welcome your valuable feedbacks to **elagliterature@gmail.com.**

## போதகரை பற்றி



Ps. ஆஸ்வின் ஜேம்ஸ்டட் அவர்கள் ELAG சபையின் தலைமை போதகர்.

இவர் தேவனால் அபிஷேகம் பண்ணப்பட்டு, தன் செய்திகளின் மூலம் பல ஆத்துமாக்களை உயிர்ப்பிக்கும், வல்லமையான, அபிஷேகம் பண்ணப்பட்ட தேவ மனிதர். இவர் தம் கல்லூரி காலங்களில் இருந்து பகுதி நேர ஊழியம் செய்து வந்தார்.

இறையியல் பட்டதாரியான இவர், 1999 முதல் முழுநேர ஊழியம் செய்து வருகிறார். தேவ ஆவியானவரின் அபிஷேகம் நிறைந்த இவருடைய வார்த்தைகள் பலர் வாழ்வில் எழுப்புதலையும், வாழ்வாதாரத்தை உயிர்ப்பித்தும் உள்ளது. தேவ ஆவியானவரின் அபிஷேகம் நிறைந்த இவருடைய கூட்டங்களில், மக்கள் தொடப்பட்டு, தெய்வீக சுகமும், விடுதலையும் பெற்றுள்ளனர்.

இவருடைய ஊழியப் பாதையில் உணர்ச்சி பூர்வமான விடுதலை சரீரப் பூர்வமான விடுதலை, பிசாசின் கட்டுகளிலிருந்து விடுதலை மற்றும் பில்லி சூனிய கட்டுகளிலிருந்து விடுதலை போன்ற பல்வேறு நிலைகளில் கர்த்தர் இவரை வல்லமையாகப் பயன்படுத்தி வருகிறார். இவருடைய ஊழியத்தின் நோக்கம் மக்களின் வாழ்வை மாற்றி, அவர்களை முழு விடுதலைக்குள்ளாக நடத்தி, கிறிஸ்துவுக்குள் தங்களுடைய அதிகாரத்தை உணரவும் வழிநடத்துகிறது.

கர்த்தர் இவரை இளைஞர்கள் மற்றும் குடும்பங்களின் மத்தியில் பயன்படுத்தி, அவர்கள் தேவனில் அடுத்த நிலைக்குள்ளாக கடந்து செல்லவும், தேவனுடைய பிள்ளைகளுக்குண்டான அதிகாரத்தை தங்கள் வாழ்வில் பயன்படுத்தவும் வழிநடத்துகிறார். தேவ ராஜ்ஜியத்தின் மேல் உள்ள இவருடைய பேரார்வம் இவரது செய்திகளில் வெளிப்பட்டு அதை கேட்கும் மக்களின் இருதயங்களில் கர்த்தரின் மேலான பேரார்வத்தைத் தூண்டுகிறது.

## சபையைப் பற்றி

ELAG சபை 4 பேருடன் 2013ல் எளிமையாக ஆரம்பிக்கப்பட்டது. விசுவாசத்துடன் சிறுகூட்டமாகத் துவங்கினோம். ஆவிக்குரிய அதிகாரத்திலும் வல்லமையிலும் நடக்கிற தேவ பிள்ளைகளை உருவாக்கி உலகமெங்கிலும் சுவிஷேசத்தை அறிவித்து, தேவனுடைய ராஜ்ஜியத்தைக் கட்டுவதே நம்முடைய நோக்கம்.

## புத்தகத்தைப் பற்றி

இந்த புத்தகம் சபையின் இலக்கிய ஊழியக் குழுவால் உருவாக்கப்பட்டது. நமது சபையின் தலைமை போதகரால், ஒவ்வொரு வாரமும் ஞாயிற்றுக்கிழமை கொடுக்கப்படும் செய்திகள் அனைத்தும் தொகுக்கப்பட்டு கிறிஸ்துவின் சரீரமாகிய சபையின் பிரயோஜனத்திற்காக, வெளியிடப்பட்டுள்ளது. இப்புத்தகமானது உங்கள் வளர்ச்சிக்கும் ஆசிர்வாதத்திற்கும் ஏதுவாக அமையட்டும் என்று நாங்கள் வாழ்த்துகிறோம்.

ETERNAL LIGHT AG
let your light shine


**Eternal Light AG Church**
Opp. to St.Xavier's School,
2nd Cross, Beddadasapura Road,
Electronic City Phase I,
Bengaluru-560100,
Karnataka, India

**Sunday Service:**
English Service : 09:00 AM - 11:00 AM
Tamil Service : 11:30 AM - 01:30 PM
Mob : 6364066791 / 6364066792
E-mail : ecitycf@gmail.com
Website : www.elagchurch.com